விலை: 30.00

பக்கங்கள் : இருபது

Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii



E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 05 வியாழக்கிழமை (18.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 089


## இலங்கையை குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்தக் கோரி

# யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் பேரணி

## கோஷங்களால் அதிர்ந்தது யாழ். மண்



(யாழ்ப்பாணம்)

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்தக்கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இப்பேரணியில் பலரும் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

(03ஆம் பக்கம் பார்க்க)



### வீதி விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் பலி

(சாவகச்சேரி)

தென்மராட்சி - புத்தூர் சந்திப் பகுதியில் கடந்த 6ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் 19

### பிணைமுறி மோசடி தொடர்பில் ரவி கருணாநாயக்க உட்பட எண்மருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உட்பட எண்மரை இம்மாதம் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேல் நீதின்றம் நேற்று உத்தரவிட்டது.

பிணைமுறி மோசடி தொடர்பான வழக்கிலேயே இவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

2019 மார்ச் 29 19

### யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைப்பீட மாணவர்கள் மூவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் மூவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லேரியா பரிசோதனைக் கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே குறித்த மூவரும் தொற்றாளர்களாக அடை 19

### கொரோனா 3 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில்கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 3 பேர் உயிரிழந்துள்ளதாக சுகா 19

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை இந்தியா ஆதரிக்கும்

### அழுத்தமாகக் கூறுகிறார் வெளிவிவகாரச் செயலாளர்



(கொழும்பு)

ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வின் போது இலங்கையின் பிராந்திய இறையாண்மையைப் பாதுகாக்கும் என இந்தியா உறுதியளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற இணைய வழியிலான கலந்துரையாடலில் உரையாற்றியபோதே வெளிவிவகார அமைச்சின் 19

### யாழில் கஞ்சாவுடன் முச்சக்கரவண்டி சாரதி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கஞ்சா போதைப்பொருளை விநியோகித்து வரும் முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவரை மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர். 19

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை சந்திக்கிறார் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை தான் வெகுவிரைவில் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாட உள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ்.மாவட்ட செய 19

### இலங்கை விவகாரம்
### ஜெனிவாவில் இந்தியாவின் ஆதரவைப் பெறும் முயற்சியில் பிரிட்டன் தீவிரம்

3ஆம் பக்கம் பார்க்க

### சிறுமி, வாகன திருத்துநர் உட்பட வடக்கில் நேற்றும் 9 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்று 9 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஆறு பேரும் முல்லேரியா பரிசோதனைக் கூடத்தில் மூவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட காரைநகர் அரச 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சங்கீதபூஷணம் கணபதிப்பிள்ளை காலமானார்



(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் மூத்த இசைக்கலைஞர் சங்கீதபூஷணம் சுப்பையா கணபதிப்பிள்ளை நேற்று காலமானார்.

யாழ். கல்விவலயத்தின் அழகியற் பாடப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற அவர் ஆசிரியர் சேவையில் மிக நீண்டகாலமாகபணியாற்றி பெருமளவான மாணவர்களை உருவாக்கினார்.

வட இலங்கை சங்கீதசபையின் செயற்பாட்டில் மிக நீண்டகாலமாக முக்கிய செயற்பாட்டாளராகவும் அவர் விளங்கினார்.

அவரின் இறுதிக் கிரியைகள் இன்று சுழிபுரத்தில் நடைபெறும். (ஞா)

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 17.02.2021 (புதன்கிழமை) இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் சின்னத்தம்பி சிவநேசன்

( கிராம அலுவலர், கோணாவில் )



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (17.03.2021) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (19.03.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (C-1728)

இல. 65, கனகபுரம்,
கிளிநொச்சி.

077 130 9966

குடும்பத்தினர்

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை

### திருமதி மேரி சுனித்தா வெனான்சியஸ்

[ B.A (Hons), PGDE, M.Ed 2nd Upper ]

அவர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 24.02.2021 இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். (6204)

வாழ்த்துவோர் :
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை, யாழ்ப்பாணம்.

## ஆத்மார்த்தமான கண்ணீர்க் காணிக்கை

இசைப்பேரறிஞர், கலாபூஷணம்

### அமரர் சுப்பையா கணபதிப்பிள்ளை



எம்மை மெருகேற்றி பயிற்றுவித்து மிளிரவைத்த ஆசானுக்கு எங்கள் ஆத்மார்த்தமான கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு 16.10.1939


இறப்பு 17.03.2021

(C-1732)

மூளாய்,
சுழிபுரம்.

இசை ஆசிரியர்கள்
திருமதி திலகவதியார் பொன் குணரத்தினம்
த. பத்மநாதன், திருமதி பங்கயற்செல்வி முகுந்தன்

## நினைவு அஞ்சலி



### அமரர் கந்தன் இராயரட்ணம்

( முன்னாள் ஸ்ரீநாரதா வித்தியாலய அதிபர் )

அவர்கள் 2021.03.13 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இன்று ( 18.03.2021 ) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் ஸ்ரீநாரதா பாடசாலை மண்டபத்தில் அன்னாருக்கு அஞ்சலி செலுத்துவதற்கு பொது அமைப்புக்களும், பொதுமக்களும் தீர்மானித்துள்ளனர். எனவே அவ் அஞ்சலி நிகழ்வில் தங்களையும் கலந்து அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-1731)

ஒருங்கிணைப்புக் குழு
கன்பொல்லை மக்கள்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 01.10.1946

விண்ணில் 10.04.2019

### அமரர் முத்துக்குமாரு தங்கவேல் (தங்கப்பா)

திதி : 18.03.2021 வியாழக்கிழமை

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கே

ஆண்டிரண்டு ஆனாலும்
ஆறவில்லை எம்மனது
ஆலமரம் போலிருந்தீரே ஐயா
எம்மை ஆறுதல் படுத்த மீண்டும்
வரமாட்டாயோ-தெய்வமே...

மறைந்தும் மறையாமல் எம்முடன் இருந்து நல்வழிப்படுத்தும் எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவ்வேளை அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(C-1712)

தகவல் :
திருமதி. தங்கவேல் சந்திரவதனா
நடராசா வீதி, வல்வெட்டித்துறை.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# சர்வதேசத்திடம் நீதிகோரி யாழில் நடைபெற்ற எழுச்சிப் பேரணி




(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடந்த இன அழிப்புக்குச் சர்வதேச நீதி கோரியும், இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் நிறுத்துமாறு வலியுறுத்தி யாழில் நேற்றுப் புதன்கிழமை மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நல்லூர் கிட்டுப்பூங்காவில் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமான குறித்த பேரணி சர்வதேச குற்றவியல் இலங்கையைப் பாரப்படுத்துமாறு கோரி தற்போது சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்று வரும் நல்லை ஆதீனம் முன்பாக நிறைவடைந்தது.

இந்த மாபெரும் பேரணியில் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், மதத் தலைவர்கள், தமிழ்த்தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள், வடக்கு- கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-4-18-33)

## சமையல் எரிவாயு; தட்டுப்பாடு ஏற்டலாம்

(கொழும்பு)

தமிழ்- சிங்கள புத்தாண்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் பிறக்கவுள்ள நிலையில் சமையல் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு ஏற்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தை வட்டாரங்களின் தகவலின்படி இந்த மாத இறுதிக்குள் நாடு முழுவதும் மக்கள் கடுமையான எரிவாயு பற்றாக் குறையை சந்திக்க நேரிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## தலைமன்னார் விபத்து
## பாதுகாப்பு ஊழியர், சாரதிக்கு விளக்க மறியல்

(மன்னார்)

தலைமன்னார் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் புகையிரதம் மற்றும் தனியார் பேருந்து மோதி ஏற்பட்ட விபத்து தொடர்பாக தலைமன்னார் பொலிஸார் நேற்று புதன்கிழமை குறித்த புகையிரத கடவையின் பாதுகாப்பு ஊழியர் மற்றும் விபத்துக்குள்ளான தனியார் பேருந்து சாரதியையும் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

அவ் இருவரையும் இம் மாதம் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (நி-4-285)

## யாழ்.வருகிறார் கெஹலிய

(குப்பிழான்)

அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இன்று வியாழக்கிழமை யாழ். குடாநாட்டுக்கு வருகை தரவுள்ளார்.

இருநாள் விஜயமாக யாழ். வருகை தரும் அவர் நயினாதீவுக்குச் செல்லவுள்ளதுடன் வட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள புதிய தபால் நிலையத்தையும் திறந்து வைக்கவுள்ளார். (நி-4-18)

## இலங்கைக்கு எதிரான தீர்மானம்
## இந்தியாவின் ஆதரவை பெறுவதில் பிரிட்டன் தீவிரம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்திற்கு இந்தியாவின் ஆதரவை பெறுவதற்கான தீவிர முயற்சிகளை பிரிட்டன் மேற் கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் அமைச்சர் தாரிக் அஹமட் இது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை மேற் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சரையும் செயலாளரையும் சந்தித்து பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது இலங்கை விவகாரம் குறித்தும் ஆராயப்பட்டதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-4)

## சிங்கள மொழியில் அறிவுறுத்தல்கள் நெருக்கடியில் தமிழ்ப் பாடசாலைகள்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் பரவலுக்கு மத்தியில் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் அறிவுறுத்தல் மற்றும் வழி காட்டல் கடிதங்கள் தனி சிங்கள மொழியில் மாத்திரம் காணப்படுவதால், அதிலுள்ள விடயங்களை புரிந்து கொள்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தமிழ் மொழியை பிரதான மொழியாகக் கொண்டு கற்றல் செயற் பாடுகளை முன்னெடுக்கும் தென் மாகாண பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித் துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறியுள்ளதாவது.

தமிழ்மொழியை பிரதான மொழியாகக் கொண்டு செயற்பட்டு வரும் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டி கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவை சிங்கள மொழியிலேயே அனுப்பி வைக்கப்படுகின்றன.

அதனால் பாடசாலை அதிபர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (நி-4)

# இந்தியாவை ஊதித்தள்ளியது இங்கிலாந்து

இந்திய அணிக்கெதிரான மூன்றாவது இருபதுக்கு இருபது போட்டியில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையே ஐந்து போட்டிகள் கொண்ட இருபது-இருபது தொடர் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது இருபது- இருபது போட்டி, அகமதா பாத் நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்றது.




நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப் பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இந்திய அணி சார்பில் இறுதி வரை கோலி ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

157 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 18.2 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 158 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஜோஸ் பட்லர் 83* (52) ஓட்டங்களுடனும், பேர்ஸ்டவ் 40* (28) ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இருபது - இருபது தொடரில் இங்கிலாந்து அணி 2:1 என்று முன்னிலை வகிக்கிறது. (4)


## கேள்வி அறிவித்தல்
### சபை நிதி வேலைத் திட்டம் - 2021
### உள்ளூராட்சி திணைக்களம்
### கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

1. கரைச்சி பிரதேச சபையின் சபை நிதி குறித்த வேலைத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி சார்பாக தகுதிவாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடம் அமைப்புக்கான சீடா (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. (தொலைபேசி 021 228 5761, தொலைநகல்: 021 228 5690, E-Mail: kilinochchi1kps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் 14.00 மணி வரை 01.04.2021ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 18.03.2021ஆம் திகதியிலிருந்து 01.04.2021ஆம்திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/= (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 01.04.2021ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (அறுபத்து மூன்று நாட்கள் - 03.06.2021 வரையும் செல்லுபடியாகும்.)
9. குறித்த பெறுகை 03/2020, 03/2020 (i) இலக்க 09.10.2020, 11.01.2021 ஆம் திகதிய பொதுநிதி சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப் பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலைவிபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் (With out Vat) | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/KI/KAPS/COU/01/2021 | வட்டக்கச்சி சந்தைக் கடைத் தொகுதி | 2.65m | 90 நாட்கள் | C8,C7 ,C6,and C5 (கட்டடம்) | 30000 | 01.07.2021 |

கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 25.03.2021ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

தவிசாளர்
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

18.03.2021 (C-1726)


# இலங்கை உலக கிண்ணத்தை கைப்பற்றி நேற்றுடன் 25 ஆண்டுகள் நிறைவு



இலங்கை கிரிக்கெட் அணியானது ஒருநாள் சர்வதேச உலகக் கிண்ணத்தை கைப்பற்றி நேற்றுடன் 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

1996 மார்ச் 17 என்பது உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களின் மனதில் ஒரு மறக்க முடியாத நினை வினை ஏற்படுத்திய நாள் ஆகும்.

1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி தான் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இலங்கை கிரிக்கெட் அணி அனைவரையும் ஆச் சரியத்தில் ஆழ்த்தி உலகக் கிண் ணத்தை கைப்பற்றியது.

இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை தோற்கடித்தது இலங்கை லயன்ஸ். இந்த பருவத்தில் போட்டி முழுவதும் ஆதிக்கத்தை வெளிப்படுத்தி காலிறுதியில் இங்கிலாந்தையும் அரையிறுதியில் இந்தியாவையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

பாகிஸ்தானின் லாகூரில் நடந்த இறுதிப் போட்டியில் இலங்கை அணி அவுஸ்திரேலிய அணியை 50 ஓவர்களில் 241/7 ஆக கட்டுப்படுத்தியது.

242 என்ற வெற்றியில க்கை நோக்கிபதிலுக்கு துடுப் பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை வெறும் 23 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை இழந்தது.

பின்னர் ஜோடி சேர்ந்த அரவிந்த டி சில்வா - அசங்க குருசின்ஹ தமக்கிடையில் 101 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து அணிக்கு வலுவூட்டினர்.

பின்னர் அணித் தலைவர் அர் ஜுன ரணதுங்க 37 பந்துகளில் 47 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை முடித்து வைத்தார்.

அதன்படி இலங்கை அணி 46.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 245 ஓட்டங்களை பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக பந்து வீச்சில் மூன்று விக்கெட்டுகளையும் துடுப்பாட்டத்தில் 107 ஓட்டங்களையும் குவித்த அரவிந்த டி சில்வா தெரிவானார். (4)

# ஐ.சி.சியால் 2 வீரர்களுக்கு 8 வருடத் தடை விதிப்பு




சர்வதேச கிரிக்கெட் சபை யின் ஊழல் மோசடி தடுப்பு விதிகளின் கீழ் ஐக்கிய அரபு இராச்சிய கிரிக்கெட் அணியின் வீரர்களான மொஹமட் நவீட் மற்றும் ஷய்மான் அன்வர் ஆகிய இருவருக்கும் தலா 8 வருடத் தடை விதிக்கப்பட்டுள் ளது.

குறித்த தடையின் படி அவர்கள் இருவரும் 8 வருட ங்களுக்கு கிரிக் கெட் தொடர்பான எந்தவொரு நட வடிக்கையிலும் ஈடுபடவோ அல்லது பங்கு பற்றவோ முடியாது.

2019 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற ஐ.சி.சியின் ஆண் களுக்கான இருபது- 20 உல கக் கிண்ண தகுதிகாண் சுற்றுப்போட்டியின்போது ஊழல் மோசடி செய்ய முயற்சித்ததாக இருவர் மீதும் 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 ஆம் திகதி தற்காலிகத்தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப் படையில், சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல்மோசடி தடுப்பு விதிகளில் 2 விதிகளை மீறியமை உறுதியாகிய நிலையில் இருவர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு இவ்வாறு 8 வருட தடை விதிக்கப்பட்டுள்ளது. (4)

## தமிழக அரசியல் மேடைகளில் பேசப்படும் தனி ஈழம் குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை - சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

**ஈழம் தொடர்பில் இந்திய அரசியல் கட்சி குறிப்பிட்டுள்ளதாக குறிப்பிடப்படும் கருத்திற்கு அதிகளவு கவனம் செலுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது என தொலை நோக்கு கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் இவ் வாறு தெரிவித்தார்.

தேர்தல் முடிவடைந்த பிறகு தேர்தல் மேடைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அனைத்தும் மறைக் கப்பட்டுவிடும். காலகால மாக இவ்வாறான தன் மையே காணப்படுகிறது.

பாரிய போராட்டத்திற்கு மத்தியில் 30 வருட கால சிவில் யுத்தம் நிறைவடைந் துள்ளது.

தேசிய பாதுகாப்பு உறுதி ப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே நாட்டில் இனியொருபோதும் பிரிவினைவாத செயற்பாடு கள் எவ்வழிகளினாலும் தோற்றம் பெறாது என அவர் தெரிவித்தார். (நி-4)

## சுவசெரிய அம்புலன்ஸ் 7 இலட்சத்திற்கும் அதிக மக்களுக்கு சேவையாற்றியுள்ளது

(கொழும்பு)

"1990" சுவசெரிய அம்பு லன்ஸ் சேவைக்கு இதுவரை 3.5 மில்லியனுக்கும் அதிக மான தொலைபேசி அழைப் புகள் வந்துள்ளதாக ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல் கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த சேவை க்கு நாளொன்றுக்கு 5,000 க்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன. சுவசெரிய அம்புலன்ஸ் 780,000 க்கும் அதிகமான மக்களுக்கு இதுவரை சேவை செய்துள்ளது. அத்துடன் ஒரு நாளைக்கு 1,000 க்கும் மேற் பட்ட வைத்தியசாலைகளுக்கு இது பங்காற்றுகின்றது என் றும் அவர் தெரிவித்தார். (நி-4)

## 7 மில்லியன் தடுப்பூசிகளை கொள்வனவு செய்யத் திட்டம்

(கொழும்பு)

ரஷ்யா தயாரிக்கும் 7 மில்லியன் ஸ்புட்னிக் வி கொரோனா தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய இல ங்கை அரசாங்கம் திட்டமிட் டுள்ளதாக கொரோனா தடுப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது சீரம் இன்ஸ்டிடியூட் ஒப் இந்தியாவிலிருந்து பெறப் பட்ட ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனேகா கொரோனா தடுப் பூசி பொதுமக்களுக்கு செலு த்தப்படுகின்றமை குறிப்பிட த்தக்கது. (நி-4)

## ஷானிக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

குற்றப் புலனாய்வுப் பிரிவு திணைக்களத்தின் முன் னாள் பணிப்பாளர். ஷானி அபேசேகர உள்ளிட்ட மூவரை மார்ச் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

போலியான ஆதாரங் களை வழங்கிய குற்றச்சா ட்டில் அவர்கள் கைதுசெய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முஹம்மத் சாத் கட்டாக்கை குடியரசுக் கட்டடத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார். மார்ச் 23 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் பாகிஸ்தான் தேசிய தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அமைச்சர் குணவர்த்தனவுக்கு உயர்ஸ்தானிகர் கட்டாக் இதன்போது வெளிவிவகார அமைச்சரிடம் அழைப்பு விடுத்தார்.

## கிணற்றில் விழுந்த விளையாட்டுப் பொருள் எடுக்க முற்பட்ட சிறுமி பரிதாபமாகப் பலி

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேற்றாத்தீவு பகுதியில் உள்ள வீடொன் றின் கிணற்றில் விழுந்த நிலையில், இரண்டரை வயது சிறுமியொருவர் மீட்கப் பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

தேற்றாத்தீவு பாலமுருகன் வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில், இரண்டாவது பிள்ளையான உதயராஜ் ஹம்சவர்த்தினியே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை தனது வீட்டில் வழமை போல் விளையா டிக் கொண்டிருந்த சிறுமி தனது விளையாட்டுப் பொருள் கிணற்றில் வீழ்ந்ததனை கண்டு அதனை தான் எடுக்க முற்பட்டபோது தவறுதலாக கிணற்றில் வீழ்ந்துள்ளார்.

கிணற்றில் வீழ்ந்துள்ள தாக அறிந்து கொண்ட குறி த்த சிறுமியின் தந்தை கிணற்றிலிருந்து மீட்ட சிறு மியை களுவாஞ்சிகுடி வைத் தியசாலையில் அனுமதித்த போதும், சிகிச்சையளிக்கப் பட்டு வந்த நிலையில் சிகி ச்சை பலனின்றி குறித்த சிறுமி உயிரிழந்துள்ளதாக விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (நி-4)

## பாகிஸ்தானின் தேவைக்கேற்ப முடிவு எடுக்க முடியாது

### அமைச்சர் சரத் வீரசேகர

(கொழும்பு)

பாகிஸ்தான் அரசின் தேவைக்கேற்ப இலங்கை யில் தீர்மானங்களை மேற் கொள்ள முடியாது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித் தார்.

புர்கா தடை தொடர்பில் மிரிஹான பொலிஸ் நிலை யத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன் றின் பின்னர் ஊடகவியலா ளர்கள் எழுப்பிய கேள்வி க்குப் பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், "இலங்கை அரசின் தேவைக்கேற்ற விதத்தி லேயே நாம் செயற்படுகின் றோம்.

புர்கா தடை விடயம் அமைச்சரவையில் கலந் துரையாடப்பட்டு, பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் காலத்தில் எவ்வாறான பதில் கிடைக் கும் என்பதைப் பொறுத்திரு ந்து பார்க்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)

## முகக்கவசம் அணிந்ததால் குறைந்த சுவாசநோய்கள்



(கொழும்பு)

கொரோனா தொற்றை அடு த்து முகக்கவசம் அணியும் செயற்பாட்டால் சுவாசம் சார்ந்த நோய்கள் பாரிய அளவில் குறைவடைந்துள்ளதாக இரா ஜாங்க அமைச்சர் சன்ன ஜய சுமன தெரிவித்துள்ளார்.

முகக்கவச உற்பத்தி நிலை யம் ஒன்றைத் திறந்து வைக் கும் நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரி வித்துள்ளார். (நி-4)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் அதிபர் திருமதி. தேவகி புவனேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்.

அமரர்

**லீலாவதி சிவதாசன்**

அவர்கள் 12.02.2021 அன்று இறையடி சேர்ந்தார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(6197)

பாடசாலைச்சமூகம்.
யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம், ஏழாலை.

# அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்ட காணிப்பத்திரங்கள் மீண்டும் யாழிற்கு

## அமைச்சர் உறுதி



(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட செயலகத்தில் இருந்து கடந்த எட்டாம் திகதி அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிப்பத்திரங்கள் மீண்டும் இன்று யாழ். மாவட்ட செயலகத்திற்கு எடுத்துவரப்படும் என கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே உறுதியளித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

யாழில் இருந்து அநுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிஆவணங்கள் மீண்டும் யாழிற்கு எடுத்துவரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு இணைத்தலைவர் அங்கஜன் மற்றும் ஏனைய உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதே அமைச்சர் காணி ஆவணங்களை மீண்டும் இன்று யாழிற்கு எடுத்துவர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார்.

அத்துடன் வடக்கில் காணி இல்லாத மக்களுக்கு பளையில் உள்ள எல்.ஆர்.சி.காணிகளை வழங்குவதென தீமானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது. (5-4-30)

# கலை இலக்கிய போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாலர்பிரிவு, சிறுவர் பிரி, கனிஷ்டபிரிவு, சிரேஷ்டபிரிவு, திறந்தபிரிவு (18 வயதிற்கு மேல்) ஆகிய பிரிவுகளின் கீழ் நடத்தப்படவுள்ள இப் போட்டிகளில் கையெழுத்துப்போட்டி, கவிதை பாடல் போட்டி, கட்டுரை போட்டி, பாடல் நயத்தல் போட்டி, நாடகப்பிரதி எழுதுதல் போட்டி, பாடலாக்க போட்டி, நாட்டார் கலை கற்றல் போட்டி, இலக்கிய விபரணப் போட்டி, சிறுகதை போட்டி, சிறுவர் கதை போட்டி, முதலான போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பான விபரங்களையும் நிபந்தனைகளையும் அலுவலக நேரத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் . அத்துடன் ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 2021. 04.30 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை சமர்ப்பித்து மேற்படி போட்டிகளில் பங்குபற்றுமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (5-4)

# வர்த்தக நிலையங்களுக்கு எதிராக கடந்த மாதத்தில் மட்டும் 72 வழக்குகள் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

கடந்த பெப்ரவரி மாதத்தில் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் விசேட பணிப்புகளுக்கு அமைவாக யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன் போது கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக பொருட்களை விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, பொதிகளில் சுட்டுத் துண்டில் விலை குறிப்பிடப்படாமை, பொருட்களின் தரம் சீரின்மை, பண்டங்களைப் பதுக்குதல், பண்டங்களின் சுட்டுத் துண்டில் உள்ள விபரங்களை உருமாற்றுதல் போன்ற குற்றங்களுக்காக 72 வழக்குகள் நீதிமன்றங்களிலே தாக்கல் செய்யப்பட்டன.

இவ்வழக்குகளுக்கு தண்டப்பணமாக ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாய் அறவிடப்பட்டுள்ளது. இவற்றிலே 26 வழக்குகள் அரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்பனை செய்த வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டன என யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பொறுப்பதிகாரியும் வடமாகாண உதவிப் பணிப்பாளருமான எ.ஜே.எல்.சாதிக் தெரிவித்தார். (5-4-103)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்து வண்ணார் பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ARV) வழங்கப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

அந்த வகையில் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு பிறவுண் றோட் கலட்டி வீதி, முற்பகல் 11.00 மணிக்கு வீரகத்தி பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கை, பிற்பகல் 2.30 மணிக்கு ஐயனார் கோவிலடி, 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு மெதடிஸ் மிசன் பாடசாலை கலட்டி இராம நாதன் வீதி, முற்பகல் 11.00 மணிக்கு சைவ பரிபாலன சபை நீராவியடி, பிற்பகல் 2.30 மணிக்கு ஆரோக்கிய மாதா கோவிலடி கஸ்தூரியார் வீதி, 24 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கனகசபை வீதி, முற்பகல் 11.00 மணிக்கு பலாலி வீதி 4ம் ஒழுங்கை , பிற்பகல் 2.30 மணிக்கு குமாரசாமி வீதி கிராம உத்தியோகத்தர் அலுவலகம், 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு ஆத்திசூடி சன சமூக நிலையம், முற்பகல் 11.00 மணிக்கு ஞானக் குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதி, பிற்பகல் 2.30 மணிக்கு கலாஜோதி சனசமூக நிலையம், 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு முருகமூர்த்திவீதி, முற்பகல் 11.00 மணிக்கு கலை வாணி சனசமூக நிலையம், பிற்பகல் 2.30 மணிக்கு தாமரை வீதி, 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு பெரிய தம்பிரான் வீதி, முற்பகல் 11.00 மணிக்கு வள்ளுவன் சனசமூக நிலையம், பிற்பகல் 2.30 மணிக்கு கலைமகள் சன சமூக நிலையம் கே.கே.எஸ் வீதி, 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கை, முற்பகல் 11.00 மணிக்கு பிறவுண் வீதி 1ம் ஒழுங்கை , பிற்பகல் 2.30 மணிக்கு அன்னசத்திர லேன் நாவலர் வீதி, 31ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு மணிக்கூட்டு ஒழுங்கை, முற்பகல் 11.00 மணிக்கு சபாபதி ஒழுங்கை , பிற்பகல் 2.30 மணிக்கு பூநாறி ஒழுங்கை ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றல் இடம் பெறும். (5-4)




# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ளது.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணியளவில் தேர்த்திருவிழாவும், மறுநாள் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (5-4-6)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரண சங்கம் பருத்தித்துறை மாவட்ட சாரண கிளைச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம நாளை மறுதினம் 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலாளரும் பருத்தித்துறை மாவட்ட சாரண கிளைச் சங்கத்தின் தலைவருமான ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெற வுள்ளது என சங்கத்தின் செயலாளர் ப.சிவானந்தன் அறிவித்துள்ளார். (5-4-6)





மாவிட்டபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் தேவராசா விக்கினேஸ்வரனின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் மாவிட்டபுரம் RDS மண்டபத்தில் ச.தனபாலு தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவிட்டபுரம் சமாதான நீதவான் எ.சின்னத்தம்பி, சிறப்பு விருந்தினராக மாவிட்டபுரம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் பு.சுபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் ஜே/231 கிராம உத்தியோகத்தர் ந.பிரசாந், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.சிறிகரன், கிராம அபிவிருத்தி சங்க தலைவர் சி.நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விசாரணை இன்றி தடுத்து வைக்கும் உத்தரவை

# அரசு உடன் விலக்க வேண்டும்

## மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து

(கொழும்பு)

**மதம், இனம் சார்ந்து சமூக ஒற்றுமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டவர்களை விசாரணையின்றி இரண்டு வருடங்கள் தடுத்து வைக்கும் உத்தரவை இலங்கை அரசாங்கம் உடனடியாக விலக்க வேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

மார்ச் மாதம் 9 ஆம் திகதி வெளியான 2021 முதலாம் இலக்க பயங்கரவாதத்தை தடுத்தல் தொடர்பான விதிமுறைகள் மிகவும் ஆபத்தான பயங்கரவாத தடைச்சட்டத்தை விரிவுபடுத்தும் ஒரு நடவடிக்கை எனவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

புதிய விதிமுறைகள் மத மற்றும் சிறுபான்மை இனத்தவர்களை அவர்களது உரிமைகளை மீறி இலக்கு வைப்பதை சுலபமாக்கும் என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இலங்கையில் எதிர்கால மீறல்கள் பற்றி தெளிவான ஆரம்பகால அறிகுறிகள் குறித்து மனித உரிமை ஆணையாளர் எச்சரிக்கை விடுத்த பின்னர் இலங்கையில் மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதையும் பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்தும் தீர்மானம் குறித்து மனித உரிமை பேரவை ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ளது.

எவராவது வார்த்தைகள் மூலம் அல்லது எழுத்து வடிவில் அல்லது காட்சி வடிவில் வன்முறைகளை அல்லது இன, மத, சமூக ஐக்கியமின்மையை அல்லது நல்லெண்ணமின்மையை அல்லது சமூகங்கள் மத குழுக்கள் மத்தியில் மோதலை ஏற்படுத்தும் எவரையும் அதிகாரிகள் தடுத்து வைத்து புனர்வாழ்வு அளிப்பதற்கு புதிய விதிமுறைகள் அனுமதியளிக்கின்றன என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

தற்போதைய பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு தடுத்து வைப்பதற்கான உத்தரவை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கான அதிகாரம் உள்ளது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (நி-4)

## பேருந்தை பிடிக்க ஓட்டோவை கடத்தியவர்களுக்கு நேர்ந்த கதி

(அப்புத்தளை)

இ.போ.ச. பேருந்து சென்றுவிட்டதால், மாணவர்கள் இருவர், அந்த பேருந்தை பிடிக்க வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைக் கடத்திச் சென்றபோது அந்த ஓட்டோ விபத்துக்குள்ளாகியதில் அவ்விரு மாணவர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து அப்புத்தளை விகாரகலை எனும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

அப்புத்தளையிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் தரம் 8 இல் கல்வி கற்று வந்த இம்மாணவர்கள் விபத்தில் கடுங்காயங்களுக்குள்ளானதால் அப்புத்தளை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதையடுத்து, அவ்விருவரும் தியத்தலாவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்விரு மாணவர்களும் பாடசாலைவிட்டு, வீடு செல்ல இ.போ.ச. பேருந்து தரிப்பிடத்துக்குச் சென்றனர். பேருந்து சென்றுவிட்டதை அறிந்த இம்மாணவர்கள் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவைக் கடத்திக்கொண்டு குறிப்பிட்ட பேருந்தை பிடிக்கச் சென்றனர். ஆனால், கடத்திச் சென்ற ஓட்டோ பாதையை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரவுன்ஸ் விக் தோட்ட ராணிதோட்டத்தில் நேற்று 20 வீடுகளைக் கொண்ட லயன் தொகுதியில் தீபரவல் ஏற்பட்டுள்ளது.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கிபா: 29 செவ் 11 சூரி 10 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, Food City Manager Londan (PR உண்டு)
எதிர்பார்ப்பு: உள்நாடும் வெளிநாடும்
தொ.இ: B/11613

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: புரட்டாதி
கிபா: 3 செவ் 9 சூரி 3 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, தொழில்-வயரிங் (சொந்த பஸ் உண்டு)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண், உள்நாடு மட்டும்.
தொ.இ: B/11616

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
கிபா: செவ் 11 சூரி7 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில் A/L, பிரான்ஸ் PR உண்டு
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்.
தொ.இ: B/11617

பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: சித்திரை
கிபா: 24 செவ், சூரி 11 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L, சொந்த பலசரக்கு வாணிபம்
எதிர்பார்ப்பு: படித்த பெண், உள்நாடு வெளிநாடு இரண்டும்
தொ.இ: B/11618

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1978 இந்து நட்சத்திரம்: கார்த்திகை
கிபா: 85 செவ் 8 சூரி7 இல்
உயரம்: 5.4
தகைமை/தொழில்:. O/L, A/L, NCAT, B.A உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் (அரச)
எதிர்பார்ப்பு: உள்நாடு-அரச உத்தியோகம், வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: G/2392

பிறப்பு: 1974 இந்து நட்சத்திரம்: சுவாதி
கிபா: 52' செவ்,சூரி8 இல் உயரம்: 5.5
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: சுய தொழில், அரச, தனியார், வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: G/2393

பிறப்பு: 1970 இந்து நட்சத்திரம்: புரட்டாதி
கிபா: 39 செவ் 6 சூரி 3இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: B.A, சைவப்புலவர், மொழி பெயர்ப்பாளர். பதவி நிலை அலுவலகர்.
எதிர்பார்ப்பு: சுயதொழில், அரச, தனியார் தொழில்,
தொ.இ: G/2394

பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: ரோகிணி
கிபா: 60 செவ் 12 சூரி11 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு கூடுதல் விருப்பம். திருமணம் நடந்து தற்போது பிரிந்துள்ளனர், உத்தியோகபூர்வமாக நடைபெறவில்லை.
தொ.இ: G/2400

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## மேலும் இரு நாட்கள் விவாதம்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து மேலும் 2 நாட்கள் விவாதம் இடம்பெறவுள்ளது.**

**அதன்படி, எதிர்வரும் மார்ச் 25 ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விவாதத்தை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.**

**பாராளுமன்ற வணிகக் குழு கூட்டத்தின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (நி-4)**

## மேலும் 354 பேர் குணமடைந்தனர்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுள் நேற்று மேலும் 354 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 85,725 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 534 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-4)


## வகுப்பு

கணிதம் தரம் 9,10,11 மாணவர்களுக்கு யாழ்.நகரில் உள்ள வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும் (6179)

தொடர்பு:- 076 645 8969



## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் (வ/து) -கிளிநொச்சி

### பதிவு இலக்கம் - P/46

## 160 KW சூரிய மின்கலத்தொகுதி பொருத்துவதற்கான கேள்வி கோரல்

எமது சங்கத்திற்கு 160KW சூரிய மின்கலத்தொகுதிபொருத்துவதற்கான கேள்வி கோரல் வழங்குநர்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை தலைமை அலுவகத்தில் பெற்று மூடிய கேள்விப் பத்திரங்களை எதிர்வரும் 24.03.2021 புதன்கிழமை பிப 5.00 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சூரிய மின் கலத்தொகுதி கேள்வி கோரல் என குறிப்பிட்டு **தலைவர், கரைச்சிதெற்கு ப.நோ.கூ.சங்கம் (வ/து), கிளிநொச்சி** எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு 021 228 5752 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

**சரவணபவன் மோகனபவன், தலைவர்.**
**கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து),**
**கிளிநொச்சி.**

(C-1725)

# நாடும் தேசமும் உலகமும் அவளே

## மகளிர் கௌரவிப்பு



(நெளுக்குளம்)

"நாடும்தேசமும் உலகமும் அவளே" எனும் தொனிப்பொருளில் வவுனியா மாவட்டசெயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர்தின விழா நேற்று முன் தினம் நடைபெற்றது.

அரச அதிபர் சமன் பந்துல சேன தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம். சாள்ஸ் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பல்வேறு துறைகளில் சாதனைகளை படைத்த பெண்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஒரு வங்கி ஒரு கிராமம் என்ற ரீதியிலான தெரிவு செய்யப்பட்ட கிராமங்களுக்கு ஒவ்வொரு வங்கிகளும் கடன் திட்டங்களை ஏற்படுத்தி பெண்களின் வருமானத்தினைப் பெருக்கும் செயற்றிட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் கௌரவிக்கப்பட்டதுடன், நினைவுச் சின்னமும் அவருக்கு வழங்கப்பட்டது.

நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம், மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், சுலோசனா (காணி), கணக்காளர் பாலகுமார், பிரதேச செயலாளர்களான நா.கமலதாசன், இ.பிரதாபன், உதவி மாவட்ட செயலாளர் சபர்ஜா, மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(5-4-250-299)

# சுற்றுச்சூழல் அறிக்கை கிடைத்தால் காணிகள் விடுவிக்கப்படும்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் நித்தகைக் குளத்தின் கீழான காணிகளை விடுவிக்குமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கை தீர்க்கப்படாத பிரச்சினையாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று முன் தினம் ஆராயப்பட்டது.

நித்தகைக் குளத்தின் கீழான காணிகளை வனவளத்திணைக்களம் எல்லைப்படுத்தி இருப்பதன் காரணமாக காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கூட்டத்தில் கலந்து கொண்ட வனவளத் திணைக்கள அதிகாரியிடம் கேட்டபோது அவர்,

சுற்றுச் சூழல் அறிக்கை கிடைக்கப் பெற்றால் காணிகள் விடுவிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

சுற்றுச் சூழல் அறிக்கையினை சுற்றுலா அதிகார சபை அறிக்கையிட்ட பின்னர் மேலதிக நடவடிக்கை மேற்கொள்வது எனக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இதேவேளை ஆறுமுகத்தான் குளம் கிராமத்தில் வாழ்கின்ற 110 குடும்பங்கள் வயல் காணிகளற்ற நிலையில் நித்தகைக் குளம், வீரங்குளம் ஆகிய குளங்களின் கீழ் வயல் நிலங்கள் வழங்குங்கள் என கடந்த ஐந்தாண்டுகளாக தொடர்ச்சியாக மக்கள் போராடி வருகின்றனர்.

நித்தகைக்குளம் புனரமைக்கப்பட்டு வயல் காணிகள் வழங்கப்படுமானால் இப்பகுதியில் வாழ்கின்ற விவசாயக் குடும்பங்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபடுவார்கள். (5-4-350)

# கிரவல் அகழப்பட்ட குழிகளில் மலக்கழிவுகளை கொட்ட முடியாது

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் பகுதியில் கிரவல் அகழப்பட்ட குழிகளில் மலக் கழிவுகளை கொட்ட முடியாது என முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இப்பிரச்சினை ஆராயப்பட்டு தீர்வுகள் காணப்பட முடியாத நிலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் ஆராயப்பட்டது.

துணுக்காய் பிரதேசத்தில் கிரவல் மண் அகழ்வு இடம் பெற்ற குழிகளில் மலக் கழிவுகளைக் கொட்ட முடியுமா? என துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் அ.அமிர்தலிங்கம் கேட்டபோதே குழிகள் காணப்படுகின்றன என்பதற்காக மலக் கழிவுகளைக் கொட்ட முடியாது.

கழிவுகளைக் கொட்டுவதற்கான பொருத்தமான இடங்களை பிரதேச சபை, சுகாதாரப் பகுதியினர் இணைந்து இனங்காண வேண்டும் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

துணுக்காய் பிரதேச சபையினர் தற்போது மலக் கழிவுகளை கல்விளான் பகுதியில் கொட்டி வருகின்றனர்.

இப்பகுதிக்கு அருகில் விளையாட்டு மைதானம் மற்றும் குடியிருப்புகள் நெருங்கி இருப்பதன் காரணமாக பொருத்தமான இடத்திற்கான காணியினை வழங்குமாறு துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (5-4-350)




# வலிந்து உதவுவதற்கான குழு ஸ்கந்தபுரத்தில் அமைக்கப்பட்டது

(அக்கராயன்)

இறப்புகள் நடைபெறுகின்ற போது வலிந்து உதவுவதற்கான குழுவொன்று கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக கு.விமலேஸ்வரனும் செயலாளராக நா.சபநாயகமும் பொருளாளராக சு.தயாபரனும் உபதலைவராக சி.கனகசபாபதியும் உபசெயலாளராக எஸ்.பிரியனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிராம உத்தியோகத்தர் ப.சபாரட்ணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சு.தயாபரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இறப்புகளின்போது செலவுகள் குறைத்து கிரியைகளை மேற்கொள்ளுதல், அமைதியான முறையில் இறுதி ஊர்வலங்களை நடத்துதல், இறப்புகள் நிகழ்ந்த வீடுகளுக்கு வலிந்து உதவுதலை நடைமுறைப்படுத்தல் இக்குழுவின் பிரதான இலக்காகும். (5-4-350)

# முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத மீன்பிடி தொடர்கின்றது

## சமாசத் தலைவர் தெரிவிப்பு

(அக்கராயன்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறுகின்ற சட்ட விரோத கடற்றொழில்களைக் கட்டுப்படுத்துங்கள் என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்ரிக் ஜோன்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு கடலில் வெளிச்சம் பாய்ச்சி தொழில் செய்கின்ற சட்டவிரோத தொழில் நடைபெறுகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களமும், கடற்படையும் தவறிவிட்டுள்ளன.



இதன் காரணமாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். புல்மோட்டைப் பக்கம் இருந்து வருபவர்களே வெளிச்சம் பாய்ச்சித் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இது தடுக்கப்பட வேண்டும். கடற்படை இதனைக் கட்டுப்படுத்துவதில்லை. இதே நேரத்தில் நாயாறுப் பகுதியில் நூற்றுக்கணக்கான வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வாடியடிகளை அமைத்து தொழில் செய்கின்றனர். கடந்த பத்தாண்டுகளுக்கு சுமார் முப்பது அனுமதிகளே சமாசத்தினால் வழங்கப்பட்டன.

ஆனால் தற்போது அனுமதிகள் இன்றி நூற்றுக்கணக்கான பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் நாயாறுக் கடற்கரையில் வாடிகள் அமைத்து தொழில் புரிவதன் காரணமாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்களில் ஒருவரான ஜி.எம்.சாள்ஸ் கடற்றொழில் சம்பந்தமாக கடற்றொழில் அமைச்சர்தான் முடிவெடுக்க வேண்டும். நான் முடிவு எடுக்க முடியாது எனத் தெரிவித்தார். இதன்போது சமாசத் தலைவர் அமைச்சரிடமும் இப்பிரச்சினைகளை தெரியப்படுத்தி உள்ளதாகத் தெரிவித்தார். (5-4-350)

# குடும்பஸ்தர் மீது தாக்குதல்; பொலிஸில் முறைப்பாடு பதிவு

(கண்டாவளை)

மல்லாவி இல. 188,புகழேந்தி நகரப் பகுதியில் உள்ள ஒருவர் தனது உறவினர் ஒருவரின் வீட்டில் தனது கால் நடைகளை பட்டியில் அடைத்து விட்டு அவர்களின் வீட்டில் தங்கியிருந்த இளம் குடும்பஸ்தர் மீது கடந்த 13 ஆம் திகதி இரவு 2 மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த இளம் குடும்பஸ்தர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இதே நேரம் குறித்த வீட்டின் உரிமையாளர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (5-4-315)

# இராசிபலன்

18.03.2021
பங்குனி 5, வியாழக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 12.54 மணிவரை
பரணி முற்பகல் 9.44 மணிவரை
சுபநேரம் 7.49 - 9.19 மணிவரை
இராகுகாலம் 1.49 - 3.19 மணிவரை
சந்திராஷ்டமம்:- அத்தம், சித்திரை
கார்த்திகை விரதம். வளவன்

**மேஷம்** — சிலர் மீது காரணமில்லாமல் கோபப்படுவீர்கள், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம், வேலைச் சுமை கூடும் நாள், சிந்தனை மிகுதியான நாள்.

**ரிஷபம்** — பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், தொழில் சார்ந்த பயணங்கள் ஏற்படலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

**மிதுனம்** — இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்திகரமாக அமையும்.

**கடகம்** — கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், பயணத்தால் பலனுண்டு, செய் தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** — உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்; தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கன்னி** — பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**துலாம்** — தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** — சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழிலில் சிறப்புகள் ஏற்பட்லாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு** — பொன்னான எதிர்காலத்தை அமைக்க புதிய வழி பிறக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்** — விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத்தினருடன் மகிழ்ச்சி தரும் பயணங்கள் மேற்கொள்ளும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் கூடும்.

**கும்பம்** — பொதுப்பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, சுதந்திரமாகச் செயற்படுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** — மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

கவலையை விட மிகவும் கொடியது ஒருவரிடம் உள்ள சந்தேகமே.

# கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர்களுக்கு எதிராக 200 இற்கும் அதிகமான குற்றச்சாட்டுகள்

## உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தகவல்

(கொழும்பு)

**பிரதேச செயலாளர்களுக்கு எதிராக சுமார் 200 ஊழல், மோசடி குற்றச்சாட்டுகள் கிடைத்துள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.**

கிராம உத்தியோகத்தர்கள் தொடர்பில் 200 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் அமைச்சிற்கு கிடைத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் எம்.எச்.எம். சித்ரானந்த குறிப்பிட்டுள்ளார்.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை பிரிவினூடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விசாரணைகளில் குற்றவாளிகளாக அடையாளங் காணப்படுவோருக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அரசாங்கத்தினால் மக்களுக்கு ஆற்றப்படும் சேவைகளை உரிய வகையில் முன்னெடுக்காத அதிகாரிகள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-4)

# தனிமைப்படுத்தல் நாட்களை 7 ஆக குறைக்கத் தீர்மானம்-அசேல குணவர்த்தன

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து வரும் இலங்கையர்கள் தொடர்பாக பின்பற்றப்படும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் பல திருத்தங்கள் விரைவில் மேற்கொள்ளப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கொவிட் பரவலை தடுப்பதற்கான விசேட செயலணிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



வெளிநாடுகளிலிருந்து வருகை தருவோருக்கான தனிமைப்படுத்தல் காலத்தை 7 நாட்களாக குறைப்பது உட்பட பல திருத்தங்கள் இதன் கீழ் செய்யப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அது மாத்திரமன்றி 7 மில்லியன் ரஷ்ய கொவிட் தடுப்பூசிகளை முன்பதிவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# நாட்டை மீளவும் முழுமையாக முடக்குவது சாத்தியமற்றது-பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

நாட்டை மீளவும் முழுமையாக முடக்குவது என்பது நடைமுறைக்கு சாத்தியமற்றதென பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக பண்டிகைக்காலத்தில் நாட்டை முழுமையாக முடக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோகன இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான முதலீட்டு மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில், மீண்டும் நாட்டை முடக்குவது நடைமுறைக்கு சாத்தியமற்றதாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆகவே, பொதுமக்கள் இந்த பண்டிகைக் காலப்பகுதியில் உரிய சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றி, பாதுகாப்பாகச் செயற்பட வேண்டியது கட்டாயமானது எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# டிஜிட்டல் மயமாக்கலில் நுழைந்த அஞ்சல் திணைக்களம்



(கொழும்பு)

இலங்கை அஞ்சல் திணைக்களம் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தபால் முத்திரைகளை அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்திய தன் மூலம் டிஜிட்டல் மயமாக்கலில் நுழைந்துள்ளது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் ஆதரவின் பேரில் வெகுஜன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சகத்தில் நேற்று முன்தினம் இந்த முத்திரைகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி QR குறியீட்டைக் கொண்ட 25 ரூபாய் பெறுமதியான டிஜிட்டல் முத்திரைகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.


QR குறியீட்டை ஸ்கான் செய்து, முத்திரை பணியகத்தின் இலங்கை அஞ்சல் வலைத்தளத்தை அணுகுவதன் மூலம் முத்திரை தொடர்பான அல்லது தொடர்புடைய கூடுதல் தகவல்களைப் பெறலாம்.

இந்நிகழ்வின்போது சிறப்பு பாதுகாப்பு அடையாளத்துடன் 500 ரூபாய் பெறுமதியான புதிய தபால் முத்திரையும் வெளியிடப்பட்டது. 1857 ஏப்ரல் முதலாம் திகதி நாட்டின் வரலாற்றில் முதல் முத்திரை வெளியிடப்பட்டது. இன்று வரை இலங்கை தபால் துறை பல்வேறு சந்தர்ப்பங்களுடன் ஏராளமான நினைவு முத்திரைகளை வெளியிட்டுள்ளது. (நி-4)



# சிறுவர் அரங்கம்

## கொக்கும் நரியும்



அது ஒரு அடர்ந்த காடு. அங்கு பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அந்த காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அதற்கு எப்போதும் யாரையாவது ஏமாற்றி அவர்கள் ஏமாறுவதைக் கண்டு மனம் மகிழ்வது பொழுது போக்காக இருந்தது.

அதே காட்டில் அறிவு மிக்க கொக்கு ஒன்றும் இருந்தது. அந்த கொக்கு அனைத்து மிருகங்களிடமும் நன் மதிப்பை பெற்றிருந்தது.

இதை பொறுக்க முடியாத நயவஞ்சக நரி அந்த கொக்கை எப்படியாவது ஏமாற்ற வேண்டும் என்று நினைத்தது.

ஒருநாள் கொக்கு நரியின் குகை இருக்கும் வழியில் வந்து கொண்டிருந்தது.

நரி அந்த கொக்கைப் பார்த்து "நண்பனே! உன்னுடைய அறிவைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறேன். நான் நாளை உனக்கு ஒரு விருந்து வைக்க விரும்புகிறேன். உன்னால் வர முடியுமா?" என்று கேட்டது.


கொக்கும் சரி வருகிறேன் என்று கூறி விட்டுச் சென்றது. அடுத்த நாள், நரி சுவைமிக்க சூப் ஒன்றை செய்தது. அன்று மாலை கொக்கு நரியின் இடத்திற்கு சென்றது. நரியோ திட்டமிட்ட படி, சூப்பை அகன்ற இரு தட்டில் ஊற்றியது. ஒன்றை கொக்கிடம் கொடுத்தது.

கொக்கினால் வாய் அகன்ற தட்டில் உள்ள சூப்பை குடிக்க முடியவில்லை. நரியோ நக்கி நக்கி அந்த சூப்பை குடித்துவிட்டு, "நண்பனே இந்த சூப்பை உனக்காக செய்தேன் எப்படி இருந்தது?" என்று சிரித்துக் கொண்டே கேட்டது.

கொக்கு ஏமாற்றப்பட்டதை உணர்ந்தது. நரியிடம், "நண்பனே சூப் மிகவும் ருசியாக இருந்தது" என்று கூறியது . கொக்கு நரியிடம், "இரவு நேரம் ஆக போகிறது நான் செல்ல வேண்டும்" என்று கூறியது.

செல்லும்முன் "இன்று நீ எனக்கு விருந்து வைத்தாய்! பதிலுக்கு நான் நாளை உனக்கு விருந்து வைக்கலாம்என்று நினைக்கிறன். உன்னால் வர முடியுமா?" என்று கேட்டது. நரியும்வரசம்மதம் தெரிவித்தது.(தொடரும்)

# மகாபாரதம்




### கடோத்கஜன் பிறந்தான்

வாரணாவதத்து மாளிகையிலிருந்து தப்பியவர்கள் காட்டில் அலைந்து திரிந்தனர். மேலும் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாத நிலையில் குந்தி இருந்தாள்.

பீமன் அனைவருக்கும் தண்ணீர் கொண்டு வர தேடிச் சென்றான். அவன் தண்ணீரைக் கொண்டு வந்த போது தாயும் சகோதரர்களும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததால் பீமன் அவர்களுக்கு காவல் காத்து விழித்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் தங்கியிருந்த காடு இடும்பன் என்னும் அரக்கனுக்கு சொந்தமானதாகும். இடும்பன் காட்டில் மனித வாடை வீசுவது அறிந்து அவர்களைக் கொன்று தனக்கு உணவாக எடுத்து வரும்படி தன் தங்கை இடும்பைக்கு கட்டளை இட்டான்.

அழகிய பெண்வேடம் போட்டு வந்த இடும்பை அங்கு பீமனைக் கண்டு அவன் மேல்காதல் கொண்டாள். பீமனோ தன் தாய் சகோதரர் அனுமதி இல்லாமல் அவளை மணக்க முடியாது என்றான்.

நேரமானபடியால் தங்கையைத் தேடி இடும்பன் அங்கே வந்தான். பீமனைக் கண்டதும் அவனுடன் கடுமையாக மோதினான். அதில் இடும்பன் மாண்டான்.

இடும்பி பீமனுடன் சென்று குந்தியிடம் பீமன் மீது தனக்குள்ள காதலை தெரிவித்தாள்.

பின் குந்தி மற்ற சகோதரர்கள் சம்மதிக்க பீமன் அவளை மணந்தான். அவர்களுக்கு கடோத்கஜன் என்ற மாவீரன் பிறந்தான்.

பின் பீமன் இடும்பியிடம் தன்னை விட்டு சிலகாலம் பிரிந்திருக்க வேண்டும் என்று கூற அவளும் அவ்வாறே மகனை அழைத்துக் கொண்டு வெளியேறினாள்.

இந்நிலையில் அவர்கள் முன் வியாசர் ஒரு நாள் தோன்றி கஷ்டங்களை சிறிது காலம் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் அனைவரையும் தவ வேடம் தாங்கிய பிராமணர்கள் போல ஏகசக்கர நகரத்தில் தங்கியிருக்க வேண்டும் என்றும் நல்ல காலம் பிறக்கும் என்றும் நல்லாசி கூறினார்.

(தொடரும்)

# துப்பாக்கிச் சூட்டில் 58 பேர் உயிரிழப்பு

(நைஜர்)
மேற்கு ஆபிரிக்க நாடான நைஜரில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் சுமார் 58 பேர் உயிரிழந்துள்ளனர்.
பொதுமக்கள் குடியிருப்பு பகுதியில் கிளர்ச்சியாளர்களினால் இந்தத் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாலி அரசாங்கம் தெரிவித்துள்ளது.
அத்துடன், துப்பாக்கிதாரிகளினால் பொதுமக்கள் பயணித்த இரண்டு வாகனங்கள் எரியூட்டப்பட்டதுடன் மேலும் இரண்டு வாகனங்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன
எவ்வாறாயினும் இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் உரிமை கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கேள்வி கேட்டதால் கோபம் அடைந்து கிருமிநாசினி தெளித்த தாய்லாந்து பிரதமர்



(தாய்பே)
கேள்வி கேட்டதால் கோபமடைந்த தாய்லாந்து பிரதமர் பிரயூத் சான் ஓச்சா பத்திரிகையாளர்கள் மீது கிருமி நாசினியை (சனிடைசர்) அடித்து தனது கோபத்தை வெளிப்படுத்தினார். பிரதமரின் இந்தச் செயலுக்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.
தாய்லாந்து பிரதமர் பிரயூத் சான் ஓச்சா அண்மையில் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது 7 வருடங்களுக்கு முன்பு நடந்த போராட்டத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிக்காக 3 அமைச்சர்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர். எனவே காலியான அமைச்சரவை இடங்கள் எப்போது நிரப்பப்படும் என்று பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.
ஆனால் பிரதமர் பிரயூத் சான் ஓச்சா இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கவில்லை. தொடர்ந்து பேசிய அவர், 'வேறு ஏதாவது கேள்வி உள்ளதா? எனக்கு தெரியாது. நான் இன்னும் அதைக்காணவில்லை. இதைத் தான் ஒரு நாட்டின் பிரதமர் முதலில் தெரிந்து வைத்து கொள்ள வேண்டுமா" என்று கேட்டார். இதைத் தொடர்ந்து பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பவே கோபமடைந்த அவர், பத்திரிகையாளர்கள் மீது கிருமி நாசினியைத் தெளித்தார். கேள்வி கேட்ட பத்திரிகையாளர் மட்டுமல்லாமல் வரிசையில் உட்கார்ந்திருந்த அனைத்து பத்திரிகையாளர்கள் மீதும் கிருமி நாசினியைத் தெளித்து விட்டு அந்த அறையிலிருந்து அவர் வெளியேறினார்.
இந்த நிகழ்வுக்கு பல்வேறு சமூக ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். தாய்லாந்து ராணுவத்தின் முன்னாள் தளபதியாக இருந்தவர் பிரதமர் பிரயூத் சான் ஓச்சா என்பது குறிப்பிடத்தக்கது. பிரயூத் சான் ஓச்சா பத்திரிகையாளர்களிடம் இப்படி கரடுமுரடாக நடந்து கொள்வது இது முதல் முறை அல்ல.? பதிலிக்க முடியாத வகையில் கேள்வி கேட்கும் பத்திரிகையாளர்களை தலையில் தட்டுவது, காதைப் பிடித்து இழுப்பது, அதுமட்டுமன்றி ஒருமுறை பத்திரிகையாளர்கள் சந்திப்பில் தனது கட் அவுட்டை வைத்து விட்டு வெளியேறியது போன்ற சர்ச்சைக்குரிய செயல்களில் அவர் ஏற்கனவே ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# காற்று மாசுபாட்டை கண்டுபிடிக்க புதிய செயற்கைக் கோள்

(டுபாய்)
அமீரகத்தின் காற்று மாசுபாட்டை கண்டுபிடிக்க உதவும் செயற்கைக்கோள் நாளை மறுதினம் 20 ஆம் திகதி விண்ணில் ஏவப்படுகிறது.
இந்தச் செயற்கைக்கோளில் உள்ள கருவிகள் பல்வேறு வடிவங்களில் படங்களை எடுக்கும் வசதி கொண்டது ஆகும். இது ஏவப்பட்ட சில நாட்களில் முதல் படம் கிடைக்கும் வாய்ப்புள்ளது.
இது பூமியில் இருந்து 730 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள வட்டப் பாதையில் இருக்கும் வகையில் நிலை நிறுத்தப்படும். (நி-4)

# கர்ப்பிணிப் பெண்கள் தடுப்பூசி போடுவது குழந்தைகளுக்கு பாதுகாப்பு தரும்

## என்கிறார்கள் இஸ்ரேல் ஆய்வாளர்கள்

(இஸ்ரேல்)
கர்ப்பிணிகள் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டால் அது அவர்களின் குழந்தைகளுக்கும் பாதுகாப்புத் தரும் என இஸ்ரேல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.
ஆய்வை, ஜெருசலத்திலுள்ள Hadassah பல்கலைக்கழக மருத்துவ நிலையம் நடத்தியது.
பெப்ரவரிமாதம் நடத்தப்பட்ட ஆய்வில் பிரசவத்திற்கு மூன்று மாதமே உள்ள 20 பெண்கள் பங்கேற்றனர். இதன்போது அனைவருக்கும் இரண்டு முறை கொரோனா தடுப்பூசி போடப்பட்டது.
அதன் பின்னர் நடந்த ஆய்வில், கர்ப்பிணிகளுக்கும் அவர்களுக்கு பிறந்த சிசுக்களுக்கும், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, இஸ்ரேல் ஆய்வாளர்கள் அண்மைய முடிவை வெளியிட்டனர். (நி-4)

# பெண்கள் பாடுவதற்கு ஆப்கானில் தடைவிதிப்பு

## கடும் எதிர்ப்பையடுத்து மீளப்பெறப்பட்டது



(காபூல்)
ஆப்கானிஸ்தானில் பெண் பிள்ளைகள் பொது இடத்தில் பாட்டுப்பாடுவதற்கு அந்நாட்டு கல்வி அமைச்சு அதிகாரிகள் விதித்த தடை கடும் எதிர்ப்பை அடுத்து திரும்பப் பெறப்பட்டுள்ளது.
தலைநகர் காபூலின் கல்விப் பணிப்பாளர் கடந்த வாரம் வெளியிட்ட அறிவிப்பில் 12 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பொது இடத்தில் பாடுவதற்கு தடை விதிப்பதாக கூறப்பட்டிருந்தது.
எனினும் இதற்கு சமூக ஊடகத்தில் பரவலாக விமர்சனம் எழுந்தது. பெண்கள் பாட்டுப் பாடிய வீடியோக்களை வெளியிட்டு இதற்கு எதிர்ப்பை வெளிட்டனர்.
நாட்டின் கல்வித் துறை தலிபான் கொள்கைக்கு திரும்பும் அச்சத்தை இந்த அறிவிப்பு வெளியிட்டது.
தலிபான்கள் ஆட்சியில் பெண்கள் வீட்டுக்கு வெளியில் எந்த ஒரு சமூக செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கு கடும் கட்டுப்பாடு கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மீண்டும் சீனாவிலிருந்து ஆரம்பிக்கும் வௌவால் கொரோனாக்கள்

(பீஜிங்)
சீனாவில் கொரோனா வைரஸின் தோற்றம் பற்றிய ஆய்வில் 24 வகையாக வௌவால் கொரோனா வைரஸ்கள் கண்டறியப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
சீனாவில் வௌவால் வைரஸ்கள் குறித்து சர்வதேச விஞ்ஞானிகள் பலர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.
அவற்றில் ஷான்டோங்மருத்துவ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஷிவெய்போங் என்பவர் தலைமையில் அண்மையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
இதில், தென்மேற்கு சீனாவில் இதற்கு முன்பு அறியப்படாத 24 வகையான வௌவால் கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
அவற்றில் 4 வைரஸ்கள் உலக நாடுகளில் பெருந்தொற்றை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ்களுடன் தொடர்புடையவை என தெரிய வந்துள்ளது.
இதே போன்று ஷாங்காய் நகரை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞானி ஒருவர் கொரோனா வைரஸ்களின் வாழ்வியல் குறித்து ஆய்வு மேற்கொண்டதில், வெப்ப மண்டலப் பகுதிகளில் இருந்து பல புதிய வைரஸ்கள் தோன்றியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (நி-4)



# 20 நாட்களில் 40 ஆயிரம் நில அதிர்வுகள்

(ரீக்யாவிக்)
ஐஸ்லாந்தில் கடந்த 20 நாட்களில் மாத்திரம் 40 ஆயிரம் நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாக அந்நாட்டின் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.
எரிமலைகளால் சூழப்பட்ட ஐஸ்லாந்தில் அண்மைக்காலமாக தொடர்ந்து நில அதிர்வுகள் உணரப்பட்டு வருகிறது.
இந்த நிலையில் வழக்கத்திற்கு மாறாக குறுகிய காலத்தில் அதிக அளவில் நில அதிர்வுகள் பதிவாகி இருப்பது அந்நாட்டு மக்களை அச்சமடையச் செய்துள்ளது.
நில அதிர்வுகள் காரணமாக எரிமலைகளில் வெடிப்பு ஏற்பட வாய்ப்பிருப்பதாக மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (நி-4)

# சீனாவிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாசனை திரவியங்கள் மீட்பு



(கொழும்பு)

சீனாவிலிருந்து சட்ட விரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாசனைத் திரவியங்களை சுங்கப் பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

தங்கள் தொழிற்சாலையின் உற்பத்திக்கு மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படும் காகிதத்தை இறக்குமதி செய்யும் போர்வையிலேயே இவை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

கடமை சலுகையின் கீழ் வெளிநாடுகளில் இருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் அவற்றை உற்பத்தி செய்து மறு ஏற்றுமதி செய்வதற்கும் இந்த தொழிற்சாலை அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலை பாணந்துறை பகுதியில் பதிவு செய்யப்பட்ட பெரலெஸ் கமுவ பகுதியில் அமைந்துள்ளது.

சீனாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 40 அடி நீளமுள்ள கொள்கலனில் அதன் தொழிற்சாலையின் தயாரிப்புகளுக்குத் தேவையான பல்வேறு வகையான காகிதங்கள் அதிலிருப்பதாகக் கூறி மார்ச் 12 ஆம்திகதி கொழும்பு துறைமுகத்திற்கு இந்த கொள்கலன் கொண்டு வரப்பட்டது.

சந்தேகத்தின் பேரில் சுங்க அதிகாரிகள் கொள்கலனை நேற்று முன்தினம் ஆய்வு செய்தபோது, பல்வேறு ஷாம்புகள், கண்டிஷனர்கள் மற்றும் முடி சாயங்கள் அடங்கிய சுமார் 03 மெட்ரிக் தொன் எடையுள்ள வாசனைத் திரவியங்களை சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே அவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதுபோன்ற வாசனை திரவியங்களை இறக்குமதி செய்வதற்கு தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று கைத்தொழில் மற்றும் சேவைகள் பிரிவில் உள்ள சுங்க அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் சட்டவிரோத ஏற்றுமதியை மேற்கொண்ட தொழிற்சாலையின் பல அதிகாரிகள் மற்றும் கொழும்பு துறைமுகத்திலிருந்து அவற்றை அகற்ற முயன்ற பல நபர்கள் சுங்கத் திணைக்களத்துக்கு வரவழைக்கப்பட்டு அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (நி-4)

# அசாத் சாலியின் வாகனத்திலிருந்து வெளிநாட்டுத் துப்பாக்கி மீட்பு

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலியின் வாகனத்திலிருந்து துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் அதற்கான தோட்டாக்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் சட்டத்திற்கு முரணான கருத்துக்களை முன்வைத்ததாக குறிப்பிடப்பட்ட, மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய அவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டிருந்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பிலும் குற்றப் புலனாய்வு பிரிவினரால் அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

# சிங்கராஜவனத்திற்கு அருகிலுள்ள

## தனியார் காணிகளை அரசுடைமையாக்க தீர்மானம்

(கொழும்பு)

சிங்கராஜ வனப்பகுதியைச் சுற்றியுள்ள தனியாருக்குச் சொந்தமான நிலங்களை, விரைவில் அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளது என வனப்பாது காப்பு திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சுமார் 400 ஹெக்டேயர் நிலங்கள் உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நிலப்பகுதி காடாக இருந்தபோதிலும், தனியார் நிலப்பரப்பாக காணப்படுவதால் அதில் இடம்பெறும் காடழிப்பைத் தடுப்பதற்கு வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு எவ்வித அதிகாரமும் இல்லையெனவும் குறித்த காணிகளைக் கையகப்படுத்துவதன் ஊடாக சிங்கராஜவனப் பகுதியின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2257

விஷ்ணு

காலை முதல் மாலை வரை Phone ஐ நோண்ட வேண்டியது...



இரவு வந்தவுடன் தனிமையில் எதிர்காலத்தைப் பற்றி நினைத்து அழ வேண்டியது

சுபாங்கி

யார்ரா நீ...என்ன அப்பான்னு கூப்பிடுற



அப்பா நான்தான் காலை கிரிக்கெட் விளையாடப் போன உன் புள்ள நேசமணி


டயன்சன்



வெயில் காலம் வருகிறது எங்களுக்கு தண்ணீர் வைக்க மறக்காதீர்கள்


பூர்ணிமா

யாரும் வெயிலில் நின்ற பைக்கில் அமர வேண்டாம் பொதுநலன் கருதி...!



சாகித்தியன்

Time சரியில்லயா...?
ஆமா...
கொஞ்ச நாளாவா?
சும்மா பொறந்ததுல இருந்து



விதுசா

அக்கா உனக்கு தண்ணீ வேணுமா...?
ஆமா வேணும்
அப்ப...நீ போய் குடித்திட்டு எனக்கும் எடுத்திட்டு வா



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்கு அரசியல் ஸ்திரமின்மையும் காரணமாகும்

(கொழும்பு)

**இலங்கை ரூபாயின் பெறுமதி கூர்மையான சரிவுக்கு நாட்டில் அரசியல் உறுதியற்ற தன்மையும் ஒரு முக்கிய காரணியாக அமைந்துள்ளது என்று பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை நேற்று முன்தினம் 200 ரூபாயைத் தாண்டியது.


இந்த ஆண்டு டொலர் 200 ரூபாயைத் தாண்டுவது இதுவே முதல் முறையாகும்.

கடந்த ஆண்டு ஏப்ரல் 8 ஆம் திகதி வரலாற்றில் முதல்முறையாக டொலரின் விற்பனை விலை 200 ரூபாயைத் தாண்டியது.

நாட்டில் ஒரு நிலையான அரசியல் மற்றும் நிலையான பொருளாதாரம் நிறுவப்படும் வரை அந்நிய முதலீட்டாளர்கள் நாட்டிற்குள் வருவது நிச்சயமற்றது என்று ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வணிக பொருளாதார மற்றும் மேலாண்மை பீட பேராசிரியர் ஜானக் குமாரசிங்க தெரிவித்தார்.

இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க, அனைத்து தொழில்களும் ஒன்றிணைந்து உள்ளூர் தொழில்களை மேம்படுத்தவும் அரசியல் நோக்கங்களை ஒதுக்கி வைக்கவும் வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (நி-4)

# 172 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்ட அரியவகை பூமரம்



(கண்டி)

அம்பலாங்கொட மாதம்பாவில சரணாலயத்திற்கு அருகில் "கன புஸ் வெலா" என்று அழைக்கப்படும் இரண்டு மிக அரிதான தாவரங்கள் காலி வனவிலங்கு பாதுகாப்பு சங்கத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**Mucuna gigantea** என்ற தாவரவியல் பெயரால் அழைக்கப்படும் இந்த 2 தாவர ங்களும் சுமார் 172 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பெரதெனியா தேசிய தாவர அருங்காட்சியகத்தின் ஆராய்ச்சியாளரான பாதிய கொபல்லவ இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

மேலும் கன புஸ் வெலா 1849 ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து காலி வனவிலங்கு சங்கத்தின் தலைவர் மதுர டி சில்வா தெரிவிக்கையில்,

இது மிகவும் மதிப்புமிக்க கண்டுபிடிப்பு.

இது அழிந்துவிட்டதாக கருதப்படுகிறது. அதன் பாதுகாப்பிற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சரணாலயத்திற்கு அருகிலுள்ள தனியார் நிலங்களில் இது இருப்பதைக் கண்டோம். அது பூத்துக் குலுங்கியது. எனத் தெரிவித்தார். (நி-4)


# ஆயிரம் ரூபாய் சம்பள விவகாரத்தில் அரசாங்கம் பின்னிற்காது- ரமேஷ் பத்திரண

(ஹற்றன்)

தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபாய் சம்பளம் அரசாங்கத்தின் கொள்கை ரீதியிலான தீர்மானமாகும். இதற்கு எதிராக தோட்டக் கம்பனிகள் செயற்பட்டால் அரசாங்கம் அதற்கு எதிராக பின்னிற்கப் போவதில்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான கலாநிதி ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள செய்தி அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கொள்கை ரீதியில் அரசாங்கம் மேற்கொண்ட 1000 ரூபாய் சம்பள விடயத்திற்கு நிறுவனாங்கள் உடன்பாடு தெரிவிக்கவில்லை. இதனாலேயே சம்பள நிர்ணய சபையின் ஊடாக இதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் குறிப் பிட்டார்.



இதற்கு எதிராக நிறுவனங்கள் செயற்பட்டால், கொள்கை ரீதியில் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பளம் என்ற நிலைப்பாட்டை செயற்படுத்த ஒருபோதும் அரசாங்கம் பின்னிற்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அணுகு முறை

ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அவரைச் சுற்றி அவருடைய தோழர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

ஏதோ ஒரு முக்கியமான செய்தியை, அவர் அவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர்களும் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் கள். இந்த சமயத்திலே யாரோ ஒரு ஆள் வேகமாக அங்கு வந்தார்.

வந்த வேகத்திலேயே.... "எனக்கு ஏதாவது உதவி செய்யுங்கள்!" என்று கேட்டுக்கொண்டே வந்தார். கேட்பது உதவி... ஆனால் மிரட்டுவது மாதிரி இருக்கு. அதட்டிக் கேட்பது மாதிரி இருக்கு.

இதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் ஆத்திரப்படவில்லை... ஆனால் அவரைச் சுற்றி இருந்தவர்கள் ஆத்திரப்பட்டார்கள்...

இதைப் வெ்ரியவர் கவனித்தார். கொஞ்சம் அமைதியாக இருங்கள் என்றார். வந்தவரை கூப்பிட்டார். அவருக்குச் சில பொருட்களைக் கொடுத்தார்.

"என்ன... இப்போது உங்களுக்கு மகிழ்ச்சி தானே?" என்றார்.

"ம்... ம்...!" என்றார் அலட்சியமாக அவர்.

"நான் உங்களை நல்ல முறையிலே நடத்தினேனா?" என்றார்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை!'' என்றார் அவர். குரலில் கடுமை குறையவில்லை.

சுற்றியிருந்தவர்களாலேயே இதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கோபத்தோடு அவரை நோக்கி நெருங்க ஆரம்பித்தார்கள். பெரியவர் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்.

வந்தவரை.. 'வாருங்கள் என்னோடு' என்று சொல்லி அழைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றார். அங்கே போனதும் இன்னும் சில பொருட்களை எடுத்து அவரிடம் கொடுத்தார்.

" இப்போது திருப்தி தானே... நான் உங்களிடம் நல்ல முறையில் நடந்து கொண்டேனா..?" என்றார்.

அவர் முகம் இப்போது தான் மலர்ந்தது..."ரொம்ப நன்றி... இறைவன் உங்கள் குடும்பத்துக்கு எல்லா நன்மைகளையும் செய்வான்..!" என்று சொன்னார்.

"இதே வார்த்தைகளை என்னுடைய தோழர்களிடமும் வந்து சொன்னீர்களென்றால்... அவர்களுடைய கோபமும் தணிந்துவிடும்.... வர முடியுமா?" என்றார்.

கண்டிப்பாக வருகிறேன் என்றார். மறுநாள் காலையிலே அந்த இடத்திற்கு வந்தார். அதே மாதிரி சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

தோழர்கள் வியப்போடு பெரியவரைப் பார்த்தார்கள்.. அந்தப் பெரியவர் தான் நபிகள் நாயகம். அவர் சொன்னார்:

ஒருத்தன் ரொம்ப ஆசையாக ஓர் ஒட்டகத்தை வளர்த்து வந்தான். ஒரு நாள் அந்த ஒட்டகம் கயிற்றை அறுத்துக்கொண்டு போய்விட்டது...

அக்கம் பக்கத்திலே இருப்பவர்களெல்லாம் அந்த ஒட்டகத்தைப் பிடிப்பதற்கு முயற்சி எடுத்தார்கள்... அதைத் துரத்திக்கொண்டு ஓடினார்கள்...

ஒட்டகம் தாறுமாறாக ஓட ஆரம்பித்தது. இந்த சமயத்திலே ஒட்டகத்தை வளர்த்தவன் அங்கே ஓடி வந்தான்..

" நீங்கள் அதை ஒன்றும் செய்ய வேண்டாம்... விட்டுவிடுங்கள்.. அதனுடைய சுபாவம் எனக்கு நன்றாகத் தெரியும்... அதை சுலபமாக எனது வழிக்குக் கொண்டுவர முடியும்.. நான் பார்த்துக் கொள்கிறேன்... விட்டு விடுங்கள்..! " என்றான்.

எல்லோரும் விலகிப் போனார்கள்.

இவன் என்ன செய்தான் தெரியுமா? கொஞ்சம் புல்லை கையிலே எடுத்துக்கொண்டு அந்த ஒட்டகத்தை நெருங்கினான். அவ்வளவு தான். அது ஓடி வந்து இவன் காலடியிலே உட்கார்ந்துவிட்டது. செல்லமாக அதைத் தடவிக் கொடுத்தான்... முதுகிலே ஏறி உட்கார்ந்து கொண்டான்... அது பாட்டிற்கு மெதுவாக நடந்து போனது!

இந்தக் கதையை நபிகள் நாயகம் தம்முடைய தோழர்களுக்குச் சொன்னார்.

"ஒட்டகத்தை மட்டுமல்ல.. சில மனிதர்களையும் கூட சில விதத்திலே அணுகித்தான் அவர்களைச் சீர்திருத்த வேண்டியிருக்கிறது'' என்பதை அவர்களுக்கு உணர்த்தினார்.

இது ஒரு அழகான உளவியல் அணுகுமுறை.

சில குடும்பத் தலைவர்கள் கூட இந்த ஒட்டகம் மாதிரி நடந்துகொள்வதுண்டு.. அதன் பின் அடங்கிப் போவதும் உண்டு.

ஒரு குடும்பத் தலைவர் காலையில் எழும்பியது முதல் சத்தம் போட்டுக் கத்திக்கொண்டிருந்தார்.பக்கத்தில் இருந்தவர்களெல்லாம் ஓடிப்போய் சமாதானம் செய்து பார்த்தார்கள்.. அவர் ஓய்வது போல தெரியவில்லை! கடைசியிலே அவரது மனைவி வந்தார்...

"நீங்கள் எல்லோரும் விலகிச் செல்லுங்கள்... அவர் சுபாவம் எனக்குத் தெரியும்...நான் பார்த்துக் கொள்கிறேன்..!" என்றார். சரி என்று எல்லோரும் போய்விட்டார்கள்.


மாலை நேரம் வந்து பார்த்தார்... அவர் சத்தமில்லாமல் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார். ஆச்சரியமாக இருந்தது...

"என்னம்மா செய்தீர்கள்?" என்று கேட்டார்கள்.

''ஒன்றுமில்லை..ஒரு வேளை சாப்பாட்டை நிறுத்தினேன்... பட்டினி போட்டேன்... அவ்வளவுதான்!" என்றார் அந்த அம்மா.

10

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



**கலாநிதி க.தவலிங்கம்** ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அந்த எண்ணிக்கை உள்ளூராட்சி அதிகார சபைக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் நான்கிலொன்றுக்கு சமமான எண்ணிக்கையால் பிரிக்கப்படும். அது பெண் பிரதிநிதிகளுக்குரிய "தீர்மான எண்ணிக்கை" ஆகக் கருதப்படும்.

ஒவ்வோர் அரசியல் கட்சி மற்றும் சுயேட்சைக் குழுவும் பெற்ற வாக்குகளை அந்த தீர்மான எண்ணிக்கையினால் பிரிப்பதன் மூலம் அந்த அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

ஏற்கனவே வட்டாரம் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக கட்சியினால் தெரிவு செய்யப்பட வேண்டிய எஞ்சிய உறுப்பினர்கள், விகிதாசார முறையில் குறித்த கட்சிக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையிலிருந்து நியமிக்கப்படுவார்கள்.

## கலப்பு விகிதாசார முறை பற்றி சில கேள்வி.பதில்கள்

**1) கலப்பு விகிதாசார முறை உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் என்றால் என்ன?**

ஏதேனும் ஒரு உள்ளூராட்சி அதிகார சபையில் வட்டார மட்டத்திலும், பொது ஆவணத்தின் மூலமாகவும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்படும் முறை கலப்பு விகிதாசார முறையாகும். இதன் பிரகாரம் 2017.10.12 ஆம் திகதிய 2017 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க பிரதேச சபைகள் திருத்தப்பட்டச் சட்டத்தின் பிரகாரம் இவற்றின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- வட்டார மட்டத்தில் - 60%
- விகிதாசார அடிப்படையில்- 40%

**2) உள்ளூராட்சி அதிகார சபை நிர்வாகப் பிரதேசத்தில் விகிதாசார முறையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது?**

அனைத்து உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கும். தேர்ந்தெடுத்து நியமிக்கப்படவிருக்கும் உறுப்பினர் எண்ணிக்கை நூற்றுக்கு 60 வீதம் எனக் கருத்திற் கொண்டு, எஞ்சிய நூற்றுக்கு 40 வீதம் விகிதாசார முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் எண்ணிக்கை எனக் கணிப்பிடப்படுகின்றது. இவ்விரண்டினதும் கூட்டுத்தொகை குறித்த உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர் எண்ணிக்கையாகும்.

உதாரணம்-:

A என்னும் பிரதேச சபையை எடுத்துக்கொள்வோம். வட்டார அடிப்படையில் நூற்றுக்கு 60 வீதக் கணிப்பீடு பின்வருமாறு கணிக்கிடப்படுகிறது. உதாரணத்திற்கு ஒரு உறுப்பினர் வட்டாரம் - 14 எனவும் 02 உறுப்பினர்களைக் கொண்ட பன்மை வட்டாரம்-01 எனவும் எடுத்தால் வட்டாரங்களின் எண்ணிக்கை 15 ஆகும். ஒருமை வட்டாரத்திற்கான அபேட்சகர்கள் 14 ஆகவும் பன்மை வட்டாரத்திற்கான அபேட்சகர்கள் 2 ஆகவும் இருக்கும். எனவே மொத்த அபேட்சகர்கள் எண்ணிக்கை 16 ஆகும். இதன் பிரகாரம் வட்டார அடிப்படையில் நூற்றுக்கு 60 வீதம் 16 ஆகும். இனி விகிதாசார அடிப்படையில் நூற்றுக்கு 40 வீதத்தைக் கணிப்பிட வேண்டும்.

## விகிதாசார அடிப்படையில் நூற்றுக்கு 40 வீதக் கணிப்பீடு

சபை Aயின் முழு வட்டாரத்திற்கும் வட்டார அடிப்படையிலான அபேட்சகர்களின் எண்ணிக்கை X40/60

அதன்படி சபை Aயின் 40 வீத அபேட்சகர்களின் எண்ணிக்கை= 16x40/60= 10.66 ஆகும். மேலும் தசமதானத்தைக் கருத்திற் கொள்ளாது முழு எண்ணிக்கை கணக்கிடப்பட வேண்டும். அதன் பிரகாரம் விகிதாசார அடிப்படையிலான நூற்றுக்கு 40% அபேட்சகர்களின் எண்ணிக்கை 10 ஆகும். இதன் பிரகாரம் A என்னும் பிரதேச சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை (16+10) = 26 ஆகும்.

நாடுமுழுவதும் உள்ள உள்ளூராட்சி சபைகளின் வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை-2 இல் காட்டியதுபோல் 5092 ஆகும். இந்த 5092 உறுப்பினர்களும் 25 மாவட்டங்களுக்கு இடையே பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையின் 70 வீதம் ஆகும். மிகுதி 30 வீதம் விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படுவார்கள். இலங்கையிலுள்ள மொத்த 341 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு மாவட்ட ரீதியில் அமைந்துள்ளது. (எண்ணிக்கை அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ளது)

## கொழும்பு மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

கொழும்புமா.ச (110), ஸ்ரீ ஜெயவர்தன புறக்கோட்டை மா.ச (35), தெஹிவளை - கல்கிஸை மா.ச (48), மொறட்டுவை மா.ச (48), கடுவளை மா.ச (46), கொலன்னாவை ந.ச (18), மகரகம ந.ச (41), சீதாவக்கபுர ந.ச (23), பொரலஸ்கமுவ ந.ச (16), கெஸ்பேவ ந.ச (33), கொட்டிகாவத்த-முல்லேரியாவ பி.ச (36), ஹோமாகம பி.ச (46), சீத்தாவக்க பி.ச (43) மொத்தம் -543.

## கம்பஹா மாவட்டத்தின் 19 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

கம்பஹா மா.ச (28), நீர்கொழும்பு மா.ச (48), கட்டுநாயக்க-சீதுவ ந.ச (18), மினுவங்கொடை ந.ச (15), ஜாஎல ந.ச (16), வத்தளை-மாபோலை ந.ச(16), பேலியகொடை ந.ச (16), வத்தளை பி.ச (35), கட்டான பி.ச (41), திவுலபிட்டி பி.ச (43), மீரிகம பி.ச (48), மினுவாங்கொடை பி.ச (46), அத்தனகல்ல பி.ச (50), கம்பஹா பி.ச (36), ஜாஎல பி.ச (43), மஹர பி.ச (55), தொம்பே பி.ச (41) , பியகம பி.ச (53), களனி பி.ச (40) மொத்தம்-688.

## களுத்துறை மாவட்டத்தின் 17 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

பாணந்துறை ந.ச (16), ஹொரண ந.ச (11), களுத்துறை ந.ச (20), பேருவளை ந.ச (16), பாணந்துறை பி.ச (45), பண்டாரகம பி.ச (33), ஹொரண பி.ச (50), மதுராவல பி.ச (15), புலத்சிங்கள பி.ச (25), மத்துகம பி.ச (33), தொடங்கொடை பி.ச (23), களுத்துறை பி.ச (43), பேருவளை பி.ச (41),பாலிந்தநுவர பி.ச (23), அகலவத்தை பி.ச (20), வலல்லாவிட்ட பி.ச(23),மில்லனியா பி.ச(20) மொத்தம்-457.

## கண்டி மாவட்டத்தின் 22 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

கண்டி மா.ச (41), வத்தேகம ந.ச (15), கடுகண்ணாவ ந.ச (15), கம்பளை ந.ச (28), நாவலப்பிட்டி ந.ச (15), தும்பனை பி.ச (30), ஹாரிஸ்பத்துவ பி.ச (36), அக்குரண பி.ச (30), பூஜாபிட்டிய பி.ச (28), பாத்ததும்பர பி.ச (30),பன்வில பி.ச (16), உடுதும்பர பி.ச (16), மினிப்பே பி.ச (21), மெததும்பர பி.ச (31) குண்டசாலை பி.ச (41), பாத்தஹேவாஹெட்ட பி.ச (41), கண்டி பட்டிணமும் சூழலும் மற்றும் கங்க வட்டகோரளைடி பி.ச (21), யட்டிநுவர பி.ச (43), உடுநுவர பி.ச (38), உட்ட பலாத்த பி.ச (43), கங்க இஹல கோரளை பி.ச (21), பஸ்பாகேகோரளை பி.ச (20)மொத்தம்-620.

## மாத்தளை மாவட்டத்தின் 13 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

தம்புள்ளை மா.ச (21), மாத்தளை மா.ச (21),பல்லேபொல பி.ச(16),கலேவெல பி.ச(28),தம்புள்ளை பி.ச(26),அம்பன் கங்கைகோரளை பி.ச(16), நாவுல பி.ச (16), லக்கலபல்லேகம பி.ச(16) ,வில்கமுவ பி.ச (16),மாத்தளை பி.ச (30),யட்டவத்த பி.ச (16),உக்குவெல பி.ச (26), ரத்தொட்ட பி.ச (25) மொத்தம் - 273

## நுவரெலியா மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

நுவரெலியா மா.ச (21),ஹற்றன் திக்ஓய ந.ச (15), தலவாக்கலை லிந்துல ந.ச (11),அம்பகமுவ பி.ச (21), நுவரெலியா பி.ச (23), கொத்மலை பி.ச (53), கங்குரான்கெத்த பி.ச (40), வலப்பனே பி.ச (55) ,கொட்டகலை பி.ச (16), நோர்வூட் பி.ச (20), மஸ்கெலியா பி.ச (16), அக்கரப்பத்தனை பி.ச (15) மொத்தம் 306

## காலி மாவட்டத்தின் 20 உள்ளூராட்சிசபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

காலி மா.ச(35), அம்பலாங்கொடை ந.ச (20), ஹிக்கடுவ ந.ச (18), பலபிட்டிய பி.ச (31) ,அம்பலாங்கொடை பி.ச (20), வெலிவிட்டியதிவிதுர பி.ச (15), கரந்தெனிய பி.ச (20),பெந்தோட்டை பி.ச (21) ,எல்பிட்டிய பி.ச (28),நெலுவ பி.ச (16), தவலம பி.ச (16),நாகொட பி.ச (25), நியாகம பி.ச (16),பத்தேகம பி.ச (31), யக்கலமுல்ல பி.ச (20), ரஜ்கம பி.ச (28), அக்மீமன பி.ச (26),போப்பேபோத்தல பி.ச (20), இமதூவ பி.ச(16),ஹபராதுவ பி.ச (25) மொத்தம்-447.

## மாத்தறை மாவட்டத்தின் 17 உள்ளூராட்சிசபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

மாத்தறை மா.ச (28), வெலிகம ந.ச (18), பிட்டபெத்தர பி.ச (20), கொட்டபொல பி.ச (23) ,கிரிந்த புஹூல்வெ ல்ல பி.ச (11), முலட்டியன பி.ச (21), பஸ்கொட பி.ச (26) ,அத்துரலிய பி.ச (16) ,அக்குரெஸ்ஸ பி.ச (23) ,மாலிம்பட பி.ச (16), ஹக்மன பி.ச (16), கம்புறுபிட்டிய பி.ச (16),திஹகொட பி.ச (16), தெவிநுவர பி.ச (20), திக்வெல்ல பி.ச (26), மாத்தறை பி.ச (28), வெலிகம பி.ச(41) மொத்தம்-365.

## அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 12 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

அம்பாந்தோட்டை மா.ச (21) , தங்காலை ந.ச (18), வீரகெட்டிய பி.ச (35), கட்டுவன பி.ச (28), பெலிஅத்த பி.ச (26) ,தங்காலை பி.ச ( 26),அங்குணுகொலபெலெஸ்ஸ பி.ச (18),அம்பலாந்தோட்டை பி.ச (30),திஸ்ஸ மஹாராம பி.ச (21), சூரியவெவ பி.ச (10), அம்பாந்தோட்டை பி.ச (13), லுனுகம்வெஹெர பி.ச (16) மொத்தம்- 262

## யாழ்ப்பாண மாவட்டத்தின் 17 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

யாழ்ப்பாண மா.ச (45),வல்வெட்டித்துறை ந.ச (15), பருத்தித்துறை ந.ச (15), சாவகச்சேரி ந.ச (18), காரைநகர் பி.ச (10),ஊர்காவற்றுறை பி.ச (13), நெடுந்தீவு பி.ச(13), வேலணை பி.ச (20),வலிகாமம் மேற்கு பி.ச (25), வலிகாமம் வடக்கு பி.ச (35), வலிகாமம் தென்மேற்கு பி.ச (28), வலிகாமம் தெற்கு பி.ச(30),வலிகாமம் கிழக்கு பி.ச (36),வடமாராட்சிதென் மேற்கு பி.ச (31),பருத்தித்துறை பி.ச(20),சாவகச்சேரி பி.ச(28),நல்லூர் பி.ச (20) மொத்தம்- 402.

## கிளிநொச்சி மாவட்டத்தின் 3 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

பச்சிலைப்பள்ளி பி.ச (13), கரைச்சி பி.ச (35), பூநகரி பி.ச(18)மொத்தம்-66

(தொடரும்)

# மாகாண சபை முறைமையை நீக்க ஒருபோதும் இணங்கமாட்டோம்

## ஐக்கிய மக்கள் சக்தி உறுதி

(கொழும்பு)

மாகாணசபைமுறைமையை நீக்குவதற்கு தாம் ஒருபோதும் இணங்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படை நடவடிக்கையாகவே மாகாண சபை கொண்டுவரப்பட்டது. தற்போது 40 வருடங்கள் வரை கடந்துள்ள நிலையில், அதன் நன்மை, தீமை குறித்து கருத்துக்களை முன்வைக்க முடியும்.

இந்தக் காலகட்டத்தில் அதனைச் செயற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து, அதனை நிரந்தரமாக கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகளை எடுப்பதே தவிர, அதனை நீக்குவதற்கு நாம் ஒருபோதும் இணங்குவதில்லை. மாகாண சபை மக்கள் பிரதிநிதிகளுக்கு மாகாண சபையின் மொத்த செலவில் 0.5 வீதமே செலுத்தப்படுகின்றது. அனைத்து ஏனைய செலவுகளும் மாகாண சபையின் ஊடாக, கல்வி, சுகாதாரம், வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் மக்களுக்குத் தேவையான முன்னுரிமையான திட்டங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றன" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி

## வெற்றி தரும் ஜென்ம நட்சத்திர வழிபாடு

ஆலயத்துக்குச் சென்று இறைவழிபாடு செய்வதற்கு எத்தனையோ ஆகம கோட்பாடுகள், ஐதீக விதிமுறைகள் நடைமுறையில் உள்ளன.

அதில் ஒன்று தினமும் ஆலயத்துக்குச் செல்ல வேண்டும் என்பதாகும். தினமும் காலை, மாலை இருநேரமும் ஆலயத்துக்குச் செல்பவர்கள் முழுமையான இறையருள் இன்பத்தைப் பெற முடியும்.

நாம் ஆலயத்துக்குச் செல்லாத ஒவ்வொரு நாளையும் நமக்கு ஏற்பட்ட இழப்பாகத்தான் கருத வேண்டும். இந்த இழப்பை எப்படி சரி செய்வது? அதற்குப் பல வழிகள் உள்ளன.

அதில் முதன்மையானதாகக் கருதப்படுவது ஜென்ம நட்சத்திர வழிபாடாகும். இது நம் எல்லோராலும் மிக மிக எளிதாகக் கடைப்பிடிக்கக் கூடியது. அதோடு மிகுந்த பலன் தரக்கூடியது.

இந்த வழிபாட்டுக்கு முதலில் ஒவ்வொருவரும் அவரவர் ஜென்ம நட்சத்திரத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். ஜென்ம நட்சத்திரம் என்பது நாம் எந்த நட்சத்திரத்தில் பிறந்து இருக்கிறோமோ அதுதான் ஜென்ம நட்சத்திரம்.

ஒருவர் பிறக்கும் போது சந்திரன் எந்த இடத்தில் சஞ்சாரம் செய்கிறாரோ அதுதான் அவரது ஜென்ம நட்சத்திரமாகும். ஒருவர் தன் வாழ்நாளில் எப்படி இருப்பார் என்பதை நிர்ணயம் செய்வதே ஜென்ம நட்சத்திரம்தான்.

ஒருவர் நல்ல நட்சத்திரத்தில் பிறந்திருந்தால் அவர் வாழ்க்கையை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும் ஆற்றல் அந்த நட்சத்திரத்துக்கு உண்டு. அதனால் தான் ஜென்ம நட்சத்திரம் தினத்தன்று ஒருவர் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக்கூடாது? என்பதை நம் முன்னோர்கள் வகுத்து வைத்துள்ளனர்.

ஒருவரது ஜென்ம நட்சத்திர தினத்தன்று திருமணம், சீமந்தம், காது குத்துதல், முடி இறக்குதல், எண்ணெய் குளியல், மருந்து சாப்பிடுவது, அறுவை சிகிச்சை செய்தல், தாம்பத்திய உறவு போன்றவற்றை வைத்துக் கொள்ளக்கூடாது.

அதற்குப் பதில் இதர சுபகாரியங்கள் செய்ய வேண்டும். அதாவது குல தெய்வ வழிபாடு, இஷ்ட தெய்வ வழிபாடு, அன்னதானம், தானதர்மம் செய்தல், பதவி ஏற்பு, சொத்துக்கள் வாங்குதல் போன்றவற்றைச் செய்யலாம்.

குறிப்பாக ஆலய வழிபாட்டுக்கு மிக மிக உகந்த தினமாக ஜென்ம நட்சத்திர தினம் குறிப்பிடப்பட்டுள்ளது. வினை காரணமாக சிவபெருமானிடம் இருந்து பிரிந்து மாங்காட்டில் தவம் இருந்த பார்வதிதேவி இறுதியில் தனது ஜென்ம நட்சத்திர தினத்தன்று மணலால் சிவலிங்கம் செய்து வழிபட்ட பிறகே கணவருடன் சேர்ந்து வாழும் நிலை உண்டானது. இதன்மூலம் ஜென்ம நட்சத்திரத்தின் மகிமையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் உங்களது ஜென்ம நட்சத்திரம் தினம் எந்தத் திகதியில் வருகிறது என்பதைக் கலண்டரில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அன்றைய தினம் எவ்வளவு வேலை இருந்தாலும் சரி சிறிது நேரம் ஒதுக்கி ஆலயத்துக்குச் சென்று உங்கள் நட்சத்திரத்தைச் சொல்லி அர்ச்சனை செய்யுங்கள். அது உங்கள் ஜென்ம நட்சத்திரத்தைப் பலம் பொருந்தியதாக மாற்றும்.

27 நட்சத்திரங்களும் பெண் தேவதைகளாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. நாம் நமது ஜென்ம நட்சத்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வழிபாடு செய்யும்போது அந்த நட்சத்திரத்துக்குரிய பெண் தேவதை மனம் குளிர்ந்து உங்களுக்கு ஆற்றலை அள்ளி அள்ளித் தருவாள்.

ஆலய வழிபாட்டின் போது, கருவறை மூலவர் முன் நிற்கும் போது ஒரு நிமிடம் நாம் மனதை ஒருமுகப்படுத்தி வழிபடுவோம். அந்தச் சமயத்தில் நமது ஜென்ம நட்சத்திரத்தையும் மனதில் நினைத்துக் கொள்வது நல்லது.

சிலருக்கு அவர்களது ஜென்ம நட்சத்திரம் தெரியாமல் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் அவர்கள் பெயர் இராசிக்குரிய நட்சத்திரத்தின் தேவதையை வழிபடலாம். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## 2 கிலோ ஹெரோயினுடன் ராஜகிரியவில் ஒருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு, ராஜகிரிய பகுதியில் 2 கிலோ கிராம் ஹெரோயினுடன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடைப் படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

40 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் ஆவார். கைதான சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் சந்தேக நபரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(நி-4)

## ஆற்றிலிருந்து சடலம் மீட்பு



(கொழும்பு)

ஓட்டமாவடி பகுதியில் நீரில் மூழ்கிய நிலையில் காணப்பட்ட நபரொருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஆற்றில் மிதந்த நிலையில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தோணி ஒன்றில் தனிமையாகச் சென்ற நபரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 150 | 140 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 220 | 150 | 220 |
| தக்காளி | 800 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 100 | 120 | 140 | 140 |
| கரட் | 150 | 200 | 200 | 240 |
| பூசணி | 80 | 90 | 60 | 80 |
| புடோல் | 100 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 50 | 70 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 180 | 350 | 250 | 280 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 160 |
| பயற்றங்காய் | 160 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 220 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 800 | 800 |
| போஞ்சி | 130 | 140. | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 150 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 150 | 150 | 120 |
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 40 | 20 | 30 |
| ஈரப்பலா | 140 | 120 | -- | 100 |

# அரச காணிகளை வழங்குவதில் வடபகுதி இளைஞர்களுக்கே முன்னுரிமை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் பளைப் பகுதியில் உள்ள அரச காணிகளை, வடபகுதி இளைஞர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்க வேண்டுமென்றும் காணிகளில் முதலீடு செய்யவுள்ள இளைஞர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவுள்ளதாகவும் கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சி யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் உள்ள அரச காணிகளில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் விண்ணப்பங்கள் அனுப்பிவைத்துள்ள நிலையில், அவர்களில் சிலருக்கு பளைப் பகுதியில் உள்ள காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக, அரசியல்வாதிகள் பலர் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

அதன்போது, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரியிடம் அமைச்சர் வினவிய போது, கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் காணிக்காக விண்ணப்பித்துள்ளதாக தெரிவித்ததுடன், 1000 ஏக்கர் காணியை மக்களுக்கு வழங்கவுள்ளதாகவும், அதில் 10 ஏக்கர் காணி முதலில் பகிர்ந்தளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் வடபகுதி இளைஞர்கள் விண்ணப்பித்துள்ளதுடன், கிளிநொச்சி மாவட்டத்தில் பல ஆயிரம் குடும்பங்கள் காணி மற்றும் வீடுகளற்ற நிலையில் வசிக்கின்றனர். அவர்களுக்கு காணி வழங்க ஆவன செய்ய வேண்டுமென்றும், வடபகுதி இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருப்பதனால், அவர்கள் அந்தக் காணிகளில் உற்பத்திகளை செய்து வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு, வடபகுதி இளைஞர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை முன்வைத்தனர்.

அரசியல் பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகளின் கருத்தை ஏற்றுக்கொண்ட அமைச்சர், பளைப் பகுதியில் உள்ள அரச காணியை வடபகுதி இளைஞர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யுமாறும், முதலில் வடபகுதி மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர், வெளிமாவட்ட மக்களுக்கு காணி பகிர்ந்தளிப்பது தொடர்பில் ஆராயலாம் எனவும் தெரிவித்தார். (5-4-101)

## கத்திக்குத்துக்கு இலக்காகி இறந்தவருக்கு நீதி வேண்டி ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சியில் வட்டக்கச்சி பகுதியில் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் உயிரிழந்த அருளம்பலம் துஷ்யந்தனின் கொலைக்கு நீதி வேண்டியும், அதன் தொடர்ச்சியாக கடந்த திங்கட்கிழமை காலை இறந்தவரின் மனைவி மற்றும் சகோதரிகள் மீதும் மேற்கொண்ட தாக்குதலையும் கண்டித்தும் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணிக்கு வட்டக்கச்சி சந்தியிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் உழவு இயந்திரங்களில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை வந்தடைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகனுடன் கலந்துரையாடியதுடன், பொலிஸ்மா அதிபர், பிரதி பொலிஸ் அத்தியட்சகர், பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர், வடமாகாண ஆளுநர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை கள் ஆணைக்குழு உள்ளிட்டோருக்கு மகஜரும் கையளிக்கப்பட்டது. (5-4-315-316)

## விபத்து

(சாவகச்சேரி)

தென்மராட்சி-வரணி பகுதியில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆசிரியை ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொடிகாமம்-பருத்தித்துறை வீதி ஊடாக பயணித்த போது மோட்டார் சைக்கிள் சறுக்கியதில் இவ்விபத்து இடம் பெற்றது.

விபத்தில் காயமடைந்த வரணி வடக்கு பகுதியைச் சேர்ந்த ஆசிரியை வரணி பிரதேச வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (5-4-30)

## காணி அளவீடு செய்ய எடுத்த முயற்சி தடுத்து நிறுத்தம்

(முறிகண்டி)



கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் பொலிஸாரின் பாவனையில் உள்ள காணி அரச காணியாக அளவீடு செய்யப்பட எடுத்த முயற்சி நிறுத்தப்பட்டது.

கிளிநொச்சி நகரின் ஏ9 வீதியில் பெண்கள் சிறுவர் பிரிவு உள்ளிட்ட பொலிஸ் திணைக்கள பிரிவுகள் பயன்படுத்திவரும் காணியை அரச காணி என தெரிவித்து நேற்று அளவீடு செய்ய முயற்சி எடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் குறித்த பகுதிக்கு வருகை தந்த நில அளவையாளர்கள் அளவீட்டுக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இந்தநிலையில் அப்பகுதிக்கு வந்த சிலரால் அளவீடு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த காணி தனியார் காணி எனவும், அதன் உரிமையாளர்கள் வெளிநாட்டிலிருந்து வருகை தரும் வரை காணியை அளவீடு செய்யும் நடவடிக்கையினை நிறுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் எழுத்து மூல கடிதமும் கையளிக்கப்பட்டது.

குறித்த இடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் வருகை தந்து அளவீட்டை இடை நிறுத்துமாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து குறித்த அளவீடு செய்யும் நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டு அதிகாரிகள் திரும்பிசென்றனர். (5-4-100)

## யாழ்.செயலகத்தில் கிராமிய பொருளாதாரம் தொடர்பான கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன், வடமாகாண ஆளுநர் திருமதி. பீ.எஸ். எம் சார்ள்ஸ் மற்றும் கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வனவளத் திணைக்களத்தால் சுவீகரிக்கப்பட்டிருக்கும் காணிகள் தொடர்பான பிரச்சினைகள் ,விவசாயத்திற்கு சவாலாக விளங்கும் குரங்கு மற்றும் யானைப் பிரச்சி னைகள், காணி ஆவணங்கள் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்ட விவகாரம், சுற்றுலாத் துறையை மெருகேற்றுவதற்கான நடவடிக்கைகள், இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் காணப்படும் காணிகளை விடுவித்தல் உள்ளிட்ட பல முக்கியமான விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

மேலும் நிகழ்வில் மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர்கள், திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், துறைசார் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (5-4-30)

## நேர்முகத் தேர்வு

(சாவகச்சேரி)

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் தென் மராட்சி பிரதேசத்தை சேர்ந்த வர்களுக்கான நேர்முகத் தேர்வு நேற்று புதன்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் தென் மராட்சி பிரதேசத்தில் மூன்றாம் கட்டமாக உள்ளீர்க்கப்படவுள்ளவர்களைத் தேர்வு செய்வதற்கான நேர்முகத் தேர்வே நேற்று இடம் பெற்றது. (5-4-30)

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை மருதங்குளம் கிராம உத்தியோகத்தர் இடமாற்றப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மருதங்குளம் கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தின் முன்பாக காலை 9 மணிக்கு குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (5-299)

வெறும் வீணன் எத்தனை கற்றாலும்
தறு குறும்பானவை தான் தீரானே!
– நற்சிந்தனை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அனுமனின் தூது! அன்றும் இன்றும்

சீதையிருக்கும் இடம் தேடி அனுமன் இலங்காபுரிக்கு வருகிறான். வானக வழியாக வருகின்ற அனுமன் அசோகவனத்தை வந்தடைகிறான்.

அங்கே! சீதை சிறையிருப்பதைக் காண்கிறான்.

கற்புடைத்தேவியைக் கண்ட மாத்திரத்தில் அனுமன் ஆனந்தவயப்பட்டு துள்ளிக் குதிக்கிறான்.

தான் யார் என்பதையும் இராமனுக்கும் தனக்குமான உறவையும் சீதையிடம் எடுத்தியம்புகிறான்.

தன் முதுகில் ஏறி அமரும்படியும் தான் இராமனிடம் தங்களைக் கொண்டு சேர்க்கிறேன் என்றும் கூறுகிறான்.

அதனை அடியோடு மறுத்த சீதை; அனுமனைப் பார்த்து, அனுமா! இராமன் என்னிடம் ஒரு சத்தியம் செய்து தந்துள்ளான்.

இந்தை இப்பிறவிக்கு இரு மாதரை சிந்தையாலும் தொடேன் என்பது அவன் எனக்குச் செய்து தந்த சத்தியம். அதனை ஞாபகப்படுத்தி விடு என்கிறாள்.

இச் செய்தியோடு அனுமன் இராமன் இருக்குமிடம் செல்கிறான். இஃது இராமாயணத்தில் ஒரு சிறு துளி.

இப்போது ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் வாக்கெடுப்புக்கு வரவுள்ளது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்குமாறு உலக நாடுகளிடம் பிரிட்டன் கோரிக்கை விடுத்து வருகிறது.

பிரிட்டனின் கோரிக்கை இந்தியாவிடமும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கலாம் அல்லது எதிர்க்கலாம் அல்லது நடுநிலை வகிக்கலாம்.

இந்த மூன்று முடிவுகளில் இந்தியா எதனை எடுக்கும் என்று ஆழ்ந்து சிந்தித்தேன்.

அந்நேரம் பார்த்து என் முன் அனுமன் வந்து நிற்பது தெரிந்தது.

அன்பனே! ஆழ்ந்த சிந்தனை எதற்கானது? என்று வினவுகிறான் அனுமன்.

அனுமா! அசோகவனத்தில் சிறையிருந்த சீதையை மீட்க வந்தவன் நீ. ஆனால் நாங்களோ இலங்கை எனும் அழகிய தீவில் சிறை வைக்கப்பட்டுள்ளோம்.

எங்களுக்கு நடந்த கொடூரங்களை வாயு புத்திரனாகிய நீ அறியாமலா இருப்பாய்.

இப்போது எங்களுக்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும் என்றேன்.

அன்பனே! என்ன உதவி சொல் என்றான் அனுமன்.

அனுமா! முன்பொரு முறை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்தபோது; இந்தியாவை நம்புங்கள். இந்தியா உங்களுக்கு உதவி செய்யும் என வாக்குறுதி தந்திருந்தார்.

அனுமா! நீ இந்தியாவுக்குச் சென்று அங்கு பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து ஈழத் தமிழ் மக்களுக்கு அவர் வழங்கிய வாக்குறுதியை ஞாபகப்படுத்திவிடு என்றேன்.

அனுமன் சற்று யோசித்தான். அவனின் யோசனையைப் புரிந்து கொண்ட நான்;

அனுமா! எதிர்வரும் 22ஆம் திகதி இலங்கை தொடர்பான பிரேரணை மீது வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது என்றேன்.

இதோ! விரைந்து செல்கிறேன் என்று ஆகாய வெளியில் வேகம் எடுத்தான் அனுமன்.

# சுகாதாரத் தொண்டர்கள் ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடு செய்வதாக அமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருவதாக அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே உறுதி வழங்கினார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர்ந்து 17 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வடக்கு மாகாணச் சுகாதார தொண்டர்கள் நேற்றையதினம் யாழ்ப்பாண மாவட்ட செயலக நுழைவாயிலை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு திரும்பிய கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதார தொண்டர்களுடன் கலந்துரையாடினார்.

குறித்த கலந்துரையாடலின் போதே சுகாதார தொண்டர்களிடம் அமைச்சர் மேற்கண்டவாறு வாக்குறுதி வழங்கினார். (5-4-33)

## அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் செயற்படுவார்கள்

### அமைச்சர் வாசுதேவ எச்சரிக்கை

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் அரசாங்கத்திற்கு பாரிய சவாலாக காணப்படுகிறது. அரிசியின் நிர்ணய விலை பேணப்படாவிட்டால் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுவார்கள். ஆகவே புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலையை பகுதியளவில் குறைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நீர்வழங்கல் அமைச்சில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கொவிட் -19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் அரசாங்கம் பொருளாதாரத்தை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்துள்ளது. சிறு ஏற்றுமதி பயிர்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டதன் காரணமாக சந்தையில் சிறு ஏற்றுமதி பயிர்களுக்கான கேள்வி அதிகளவில் காணப்பட்டாலும் உள்ளூர் விவசாயிகள் பெருமளவில் பயனடைந்துள்ளார்கள்.

கடந்த ஒக்டோபர் மாதமளவில் அத்தியாவசிய பொருட்களின் விலை பெருமளவில் குறைக்கப்பட்டன. இதன்போது சீனிக்கான இறக்குமதி வரியும் குறைக்கப்பட்டது. இதனையே எதிர்தரப்பினர் தற்போது சீனி மோசடி என குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். சீனிக்கான இறக்குமதி வரி குறைப்பினால் எவ்வித மோசடிகளும் இடம்பெறவில்லை. சீனி விலை குறைப்பின் பயனை நுகர்வோர் பெற்றுக்கொள்வதில் சற்று தாமதம் ஏற்பட்டுள்ளது .இவ்விடயத்தை கொண்டு தற்போது எதிர்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக்கொள்கிறார்கள் என்றார். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

வவுனியா பிரதேசத்தில் கூமாங்குளம் கிராமம், அறவந்துலாவ (பாவற்குளம் கிராமம்), இராஜேந்திரகுளம், தரணிகுளம், கோவில்குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, வீரபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வவுனியாவில் மேலும் 10 பேருக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களில் மேலும் 10 பேருக்கு நேற்று இரவு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆடைத் தொழிற்சாலை கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 36 ஆக உயர்வடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் 24 பேர் கடந்த இரு வாரங்களில் கொரோனா தொற்றாளர்களாக அடையாளங்காணப்பட்டிருந்தனர். இதனையடுத்து குறித்த ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றும் 1800 பேரில் 800 பேருக்கு பி.சீஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களிடமும் பி.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (ஞா-250)

## சத்திய தரிசனம்

### கடமையில் கண்ணாயிருங்கள்



- காற்றை எந்த இடத்திலும் கட்டுப்படுத்தி வைக்க முடியாது. அதுபோல ஆன்மிக காற்றும் உலகெங்கும் வீசிக் கொண்டு இருக்கிறது. இதை யாராலும் தடுத்த நிறுத்த முடியாது.
- கடவுள் நமக்குரியவர் என்று நினைப்பதை விட நாம் கடவுளுக்குரியவர் என்று சிந்திப்பது உயர்வானது.
- பஜனையில் பாடிக் கொண்டிருப்பது மட்டுமே பக்தியாகாது. உள்ளத்திலும், நடத்தையிலும் உண்மையும், தூய்மையும் வெளிப்படுவதே பக்தியின் இலக்கணம்.
- வெற்றியோ, தோல்வியோ நமக்கு கிடைப்பது கிடைக்கட்டும் என பொறுப்பை கடவுளிடம் ஒப்படைத்து விட்டு கடமையில் முழுமையாக ஈடுபடுங்கள்.
- கோபம், பேராசை, காமம், பொறாமை போன்ற மலைப்பாம்புகளின் பிடியில் மனிதன் சிக்கித் தவிக்கிறான்.
- கடவுளைச் சரணடைந்து விட்டால், அவரருளை எளிதாகப் பெறலாம்.

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2021 - 13.04.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## வரவிற்கு பஞ்சம் ஏற்படாது



சிம்ம இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு விரயாதிபதி சந்திரனும் இணைந்திருக்கின்றார். எனவே விரயங்கள் ஏற்படும் என்றாலும் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் தனாதிபதி புதன் உங்கள் இராசியைப் பார்ப்பதால் வரவிற்கு பஞ்சம் ஏற்படாது.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 18 ஆம் திகதி, உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சுக்கிரன் உச்சம் பெறுகின்றார். சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும்பொழுது, தொழில் வளர்ச்சி திருப்திகரமாக இருக்கும். நடக்கும் தொழிலை விரிவு செய்வதோடு புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சுக்கிர பலம் நன்றாக இருக்கும் பொழுது, ஆடை- ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். இடம் வாங்கும் யோகமும் எதிர்பாராத தனவரவும் உண்டு.

### மீன புதன் சஞ்சாரம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன இராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு தன லாபாதிபதியாக விளங்கும் புதன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் தடை வரலாம். சூரியனோடு புதன் சேர்ந்து 'புத ஆதித்ய யோகம்' உருவாவதால் அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் தேடிவரும்.

### கும்ப குருவின் சஞ்சாரம்

ஏப்ரல் 5 ஆம் திகதி குரு பகவான், கும்ப இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். இதன் விளைவாக அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவதோடு 3, 11 ஆகிய இடங்களிலும் பதிவாகின்றது. எனவே உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கடன்சுமை குறையும். காரியங்களில் வெற்றி ஏற்படும். பூர்வீக சொத்து பிரச்சினை நீங்கும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த தகவல் அனுகூலமாக வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும்.

### மேடத்தில் புதன், சுக்கிரன் சஞ்சாரம்




ஏப்ரல் 10 ஆம் திகதி மேட இராசிக்குப் புதன் செல்கின்றார். அதேபோல் ஏப்ரல் 11 ஆம் திகதி மேட இராசிக்கு சுக்கிரன் வருகிறார். இரண்டும் ஒன்று சேரும் பொழுது, 'புத சுக்கிர யோகம்' உருவாகின்றது. எனவே பலவிதங்களில் மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து சேரும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். ஆபரண சேர்க்கை உண்டு. பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் நடை பெறும் நேரமிது.


### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

ஏப்ரல் 13 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாய் ஆகும். 4, 9 இற்கு அதிபதியான செவ்வாய் இலாப ஸ்தானத்திற்கு வரும் பொழுது மிகுந்த நன்மைகளை வழங்கும். தொழில் வியாபாரம் சூடு பிடிக்கும். அரசாங்க ஆதரவு தேடிவரும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வும் பதவி உயர்வும் வரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பெற்றோர்களின் ஆதரவு எதிர்பார்த்த அளவு கிடைக்கும். பிள் ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். இம்மாதம் சிவபெருமானையும் உமையவளையும் வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் தனாதிபதி புதனின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தனவரவு திருப்திகரமாக இருக்கும். நினைத்ததை உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் திடீரென கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு சம்பள உயர்வும் எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கும். ஞாயிறு தோறும் சிவனை வழிபடுவது நல்லது.

## பொருளாதார பற்றாக்குறை அகலும்



கன்னி இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் தனாதிபதி சுக்கிரனோடு இணைந்து 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். இந்த 'புதன் சுக்கிர யோக'த்தின் விளைவாக ஜீவன ஸ்தானம் பலப்படுகின்றது. எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். அர்த்தாஷ்டமச் சனி விலகிவிட்டதால் இனி படிப்படியாக முன்னேற்றங்கள் வரப்போகின்றது.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 7 ஆம் இடமான களத்திர ஸ்தானத்தில், மார்ச் 18 ஆம் திகதி சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். இது சுக்கிரனுக்கு உச்ச வீடாகும். எனவே நல்ல வாய்ப்புகள் உங்களைத் தேடி வரப்போகின்றது. பொதுவாக உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி சுக்கிரன். எனவே குடும்பத்தில் நீண்ட நாட்களாக தடைப்பட்டு வந்த திருமணப் பேச்சுக்கள் இப்பொழுது திடீரென முடிவிற்கு வரலாம். பெண்களால் பெருமை சேரும். புதிய ஆபரண சேர்க்கைக்கு வழிபிறக்கும். உடல் நலம் சீராகும்.

### மீன புதன் சஞ்சாரம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன இராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச்ச வீடாகும். எனவே கூடுதல் கவனத்தோடு நீங்கள் செயற்பட வேண்டிய நேரம் இது. இராசிநாதன் வலிமையிழக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் தோன்றும். அதிக விரயங்கள் ஏற்படும். யாரையும் நம்பி எதையும் செய்ய இயலாது. குல தெய்வ வழிபாடும், இஷ்ட தெய்வ வழிபாடும் துன்பத்தை விரட்டும்.

### கும்ப குருவின் சஞ்சாரம்

ஏப்ரல் 5 ஆம் திகதி குரு பகவான், கும்ப இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். இதன் விளைவாக அவரது பார்வை 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது.எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். கூடுதல் லாபம் கிடைக்க தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிமாநிலங்கள் அல்லது வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் வரலாம்.




### மேடத்தில் புதன், சுக்கிரன் சஞ்சாரம்

ஏப்ரல் 10 ஆம் திகதி மேட இராசிக்கு புதன் செல்கின்றார். அதேபோல் ஏப்ரல் 11 ஆம் திகதி மேட இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். இரண்டும் ஒன்று சேரும் பொழுது, 'புதசுக்கிர யோகம்' உருவாகின்றது. இருப்பினும் அஷ்டமத்தில் இரண்டும், ஒன்று கூடுவதால் எதிர்பார்த்த அளவிற்கு நன்மைகள் கிடைக்காது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் தொல்லைகள் ஏற்படும்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

ஏப்ரல் 13 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 10 ஆம் இடத்திற்கு வரும்பொழுது தொழில் மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் வரலாம். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலையும் அமையும். குறிப்பாக இக்காலத்தில் பூமி சம்பந்தப்பட்ட வகையில் சில பிரச்சினைகள் உருவாகலாம். மிகுந்த கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நேரமிது. இம்மாதம் புதன்கிழமை தோறும் அனுமனை வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

மாதத் தொடக்கத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனநிம்மதி கிடைக்கும். பணத்தேவை உடனுக்குடன் பூர்த்தியாகும். கணவன் -மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். பிள் ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் பலன்தரும். உத்தியோகத்தில் சம்பள உயர்வும் மேலிடத்து ஆதரவும் கிடைக்கும். நம்பிக்கைகள் நடைபெற வியாழன் தோறும் குருபகவானை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

## கலைப்பீட...

யாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் கிளிநொச்சி, மாத்தறை, புத்தளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா-18,33)

## படுகாயமடைந்த...

சிகிச்சை பெற்று வந்த இளைஞன் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் சென்றவேளை பிக்கப் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா, கனகராயன்குளம் பகுதியைச் 21வயதான துவரகன் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா-33)

## யாழில் முச்சக்கர...

சுழிபுரத்தைச் சேர்ந்த 38 வயதுடைய முச்சக்கர வண்டிச் சாரதியே யாழ்ப்பாணம் நகரில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 2 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பல இடங்களுக்கும் கஞ்சா போதைப்பொருளை விநியோகிப்பதாக விசாரணையில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஞா-33)

## ரவி கருணாநாயக...

மற்றும் 31 ஆம் திகதிகளில் இடம்பெற்ற முறிகள் மோசடி தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## 3 பேர் பலி...

தார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 537 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## ஐ.நா மனித...

செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயனாத் கொலம்பகே இதனை தெரிவித்தார்.

வர்த்தக மற்றும் ஏற்றுமதி உறவுகளின் அடிப்படையில் இலங்கைக்கு ஆதரவை வழங்க பல நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அதன் பிராந்தியத்தில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நேபாளத்தால் சூழப்பட்டுள்ள நிலையில் ஐ.நா. தீர்மானத்திற்கு எதிராக அவர்களின் ஆதரவு தேவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது பாகிஸ்தான் தனது ஆதரவை தெரிவித்துள்ளபோதும் இந்தியா தொடர்ந்து நடுநிலை அணுகுமுறையை கடைப்பிடித்து வருகிறது.

ஏப்ரல் மாதம் தமிழ்நாடு தேர்தல் உட்பட பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்தியா தற்போது நடுநிலை வகிப்பதாக அறிவித்திருக்கலாம் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனாத் கொலம்பகே கூறினார்.

இந்தியாவின் நகர்வை பல நாடுகள் அவதானித்துக் கொண்டிருக்கும் இந்த முக்கியமான கட்டத்தில் இந்தியா தனது ஆதரவை வழங்க வேண்டும் என இலங்கை எதிர்பார்க்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இதுபோன்ற மேற்கத்தேய நாடுகளின் அழுத்தங்களுக்கு ஒருபோதும் இலங்கை அரசாங்கம் அடிபணியாது என ஜயனாத் கொலம்பகே தெரிவித்தார். (ஞா)

## உறவுகளை...

லகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர், தன்னை நேற்றுக் காலை தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்திய நாட்டின் ஜனாதிபதி விரைவாக வடக்கிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை சந்தித்து அவர்களுடைய தேவைப்பாடுகள் மற்றும் அவர்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து தன்னை நேரில் வந்து சந்திக்குமாறு அறிவுறுத்தியுள்ளார் என்றார்.

அதற்கமைய வடக்கு மாகாணத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை எதிர்வரும் சனிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாட உள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார். (ஞா-33)

## வடக்கில்...

போக்குவரத்துச் சபையின் திருத்துநர் (மெக்கானிக்) ஒருவர்,

யாழ்.நகரில் வசிக்கும் 12 வயதுடைய

# மாகாண சபைத் தேர்தலை 3 மாதத்துக்குள் நடத்தலாம்

## இராஜாங்க அமைச்சர் ரொஷான்

(கொழும்பு)

மாகாண சபை தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்துவதா? அல்லது புதிய தேர்தல் முறையில் அதாவது கலப்பு தேர்தல் முறைமையில் நடத்துவதா? என்பது குறித்து உறுதியான தீர்மானம் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

பழைய தேர்தல் முறைமையில் மாகாண சபை தேர்தலை மூன்று மாத காலத்திற்குள் நடத்த முடியும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தல் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாண சபை தேர்தலை பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. தேர்தலை எம்முறைமையின் பிரகாரம் நடத்துவது என்ற சிக்கல் மாத்திரமே காணப்படுகிறது என்றார். (ஞா)

# போதைப்பொருட்களுடன் வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் கேரள கஞ்சா மற்றும் ஹெரோயின் உடைமையில் வைத்திருந்த இருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் வவுனியா, நெலுக்குளம் மற்றும் குகநகர் பகுதிகளில் வவுனியா பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் அடிப்படையில் சிறு சிறு பொதிகளாக கஞ்சா மற்றும் ஹெரோயின் உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 27, 28 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஞா-299)

சிறுமி ஒருவர் எம்.ஆர்.ஐ பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்றபோது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்,

அதேபோல முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவியில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட மீன்சந்தை வியாபாரிகளின் குடும்ப உறுப்பினர்கள் இருவர்,

வவுனியாவில் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஒருவர் நோய் அறிகுறிகளுடன் வைத்தியசாலைக்குச் சென்றபோது மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார்.

கிளிநொச்சியில் நோய் அறிகுறிகளுடன் வைத்தியசாலைக்குச் சென்ற ஒருவர்.

ஆகியோர் யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

(ஞா-18,33,316)

மெகா பவர்
திகதி 17/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0792
G 18 35 41 68 77

மஹஜன சம்பத
திகதி 2021/03/17
சீட்டிழுப்பு இலக்கம் 4429
S 3 7 6 3 5 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 17.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2724
A 49 64 66 70
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 17/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1105
இடபம் 5 0 8 1 3 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 17/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் - 466
B 09 28 48 71
1 1 1 5

சீட்டிழுப்பு வாரம் 061
சீட்டிழுப்பு திகதி 17.03.2021
வெற்றி இலக்கங்கள் 10 21 25
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,387,400/=

அத கோடிபதி
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1225
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 17.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 118,622,595
வெற்றி இலக்கங்கள் 17 65 67 71 K
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 3555
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 17.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,979,993
வெற்றி இலக்கங்கள் 08 12 30 61 D
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 3,788,098/=
திகதி: 17.03.2021
வெற்றி வாரம்: 3106
வர்ணம்: பச்சை
வெற்றி இலக்கங்கள் 05 21 28 54
மேடம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,592,460

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1399
சீட்டிழுப்பு திகதி 17/03/2021
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் J 30 33 38 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் 74,800,748/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1742
சீட்டிழுப்பு திகதி 17.03.2021
வெற்றி இலக்கங்கள் 01 02 42 59 W
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 23,147,100
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வேலையாட்கள் தேவை

யாழ். நகர், ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.

1. உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
2. தேநீர் தயாரிப்பாளர் (ஆண்)
3. சுத்திகரிப்பாளர் (பெண்)

(6196)

**021 221 6779**

இல. 452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## சோ(F)பா கிளீனிங்

தங்கள் கறைபடிந்த சோ(F)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புகளை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6201)

**077 224 2787**

## CLERK தேவை (பெண்)

வெளிநாட்டு மொழி கற்பிக்கும் நிறுவனத்திற்கு O/L தகைமையுடன் 3km இற்குள் வசிக்கும் பெண்கள் விண்ணப்பிக்கலாம். (C-1729)

ஆர்வமுள்ளோர் நாளை (19.03.2021) வெள்ளி 9.00-11.00 மணி வரை CV உடன் நேரில் வரவும்.

No. 19, Palaly Road, Aariyakulam

**077 978 9456, 076 937 0456**

## விற்பனைக்கு

ரியூட்டறி வாங்கு, மேசைகள், 45W AMP. Speakers, விறாக்கைகள், மேடைகள், கரும்பலகைகள் விற்பனைக்குண்டு. (6191)

**077 230 6653**

## காணி விற்பனைக்கு

நல்லூர், செம்மணி வீதியில் நாயன்மார்கட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (மெயின் றோட்டுடன்)

(இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.) (6125)

**077 288 0152**
**077 623 4204**

## சிறுநீரகம் தேவை

O,B குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. (6205)

**076 239 9874**

## அன்னா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-1637)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603**
**021 567 1532**

## மோட்டார் சைக்கிள் தேவை

பொக்சர் / TVS விக்டர்/ பெசன் / பெசன்பிளஸ்/ (6199)

தொடர்பு

**077 466 9597**

## A/L - 2K23

(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்) (C-1673)

மார்ச் (20.03.2021)

காலை - 9.00 a.m

**DMI JAFFNA**

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கி வரும் பிரபல நிறுவனமான சிவனருள் உற்பத்திகள் தனியார் நிறுவனத்திற்கு விற்பனை முகாமையாளர், விற்பனை பிரதிநிதி போன்ற பதவிகளுக்கு அனுபவம் உள்ளவர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு மின்னஞ்சல் / தபால் மூலமாகவோ தங்களது சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும். (C-1730)

மின்னஞ்சல் : svtpc2012@gmail.com
தொ.பே : 077 277 1436
தபால் முகவரி :
முகாமையாளர், சிவனருள் உற்பத்திகள் தனியார் நிறுவனம், D7, உருத்திரபுரம் வீதி. யெரியபரந்தன், கிளிநொச்சி.

## தாலிக் கொடி தவறவிடப்பட்டுள்ளது

2021.03.11 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று நாவற்குழி சிவபூமி - திருவாசக அரண்மனை வளாகத்தில் காலை 8.00 - 12.00 மணி வரையுள்ள சனநெரிசலுள்ள நேரத்தில் பிள்ளையார் தாலியுடன் 4 1/2 பவுண் கொடி தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கும்போது தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம். (6189)

**077 288 1066, 077 593 8567**

இல. 33, வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு.

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL


# மரண அறிவித்தல்



சங்கீதபூஷணம், கலாபூஷணம்

## திரு. சுப்பையா கணபதிப்பிள்ளை

(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் - அழகியல்)

பிறப்பு : 16.10.1939 இறப்பு : 17.03.2021

நெல்லியானைப் பிறப்பிடமாகவும் பொன்னாலையையும் சுழிபுரத்தையும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பையா கணபதிப்பிள்ளை நேற்று (17.03.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - செல்லம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு - சின்னம்மாவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சந்திரபூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரராசா (முன்னாள் பிரதேச செயலர் - சங்கானை) மற்றும் திரு. கா. சந்திரபாலன் (ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ), காலஞ்சென்ற சந்திரவதனன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கேசவதாஸ் (மலேசியா), கமலலோசனி மற்றும் திருமதி ச. சகலகலாவல்லி (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் - ஆரம்பக் கல்வி ) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.03.2021) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் பறாளாய் வீதி, சுழிபுரத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பறாளாய் வீதி, சுழிபுரம். (C-1727)

தகவல்: குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.